# சாராம்சம்

## சமூக அரசியல் யதார்த்தங்கள்

# தனிநபர் சொத்து அபகரிப்பு சட்டம்

அமேசன் புத்தகங்கள் – *'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*

*http://www.consultants21.com/page-1-public-interest-litigations.php*

# + 2012ம் ஆண்டு இலங்கை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற பிரேரணைக்கு ஆதரவளித்தமைக்கான நியாயங்கள்




*அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 818*

நூலாசிரியர் இந்த புத்தகத்தை இரண்டு பகுதிகளாக தொகுத்துள்ளார். முதலாவது பகுதியில் ஒரு சிறிய நாடாகிய இலங்கையில், பிரபலமான ஜப்பானிய கம்பெனிகளால் கட்டப்பட்ட கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின் போது இடம்பெற்ற இலங்கை அரசிற்கு பாரிய இழப்பை கொண்டுவந்த மோசடியினை தேவையற்ற இராஜதந்திர அழுத்தங்களை பாவித்து பலம் பொருந்திய நாடாகிய ஜப்பான் எவ்வாறு மூடி மறைத்தது என்பதனை காட்டியுள்ளார்.

இப்புத்தகத்தின் இரண்டாவது பகுதியில் இலங்கை அரசியல் யாப்பிற்கு விபரீதமான உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பொன்றின் மூலம்,இலங்கை பாராளுமன்றத்தினால் மிக அவசரமாக நிறைவேற்றப்பட்ட பொதுவாக சொத்து அபகரித்தல் சட்டம் என அறியப்பட்ட 2011ம் ஆண்டின் 43ம் இலக்க குறைந்தளவில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் சரியான பாவனைக்குட்படுத்தப்படாத சொத்துக்களை மறுமலர்ச்சிக்கு உள்ளாக்கும் தனிநபர் மீதான சட்டம் தொடர்பாகவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசியல் யாப்பிலே குறித்த சட்டமூலத்தின் தரவுகளையும் பின்னணியையும் நோக்குகின்ற போது இது அரசியல் சாசனத்திற்கு முரணான ஒன்று என குறிப்பிடப்பட்டிருந்ததும் அதனை உச்ச நீதிமன்றம் உத்தியோக பூர்வமாக கருத வேண்டியதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

நூலாசிரியர் பொதுவாக சொத்து அபகரித்தல் சட்டம் என அறியப்பட்ட 2011ம் ஆண்டின் 43ம் இலக்க குறைந்தளவில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் சரியான பாவனைக்குட்படுத்தப்படாத சொத்துக்களை மறுமலர்ச்சிக்கு உள்ளாக்கும் தனிநபர் மீதான சட்டம் எவ்வாறு அமைச்சரவையினால் ஒரு அவசர சட்டமூலமாக அங்கீகரிக்கப்பட்டது என்பதனையும், அதனை 20.10.2011 வியாழக்கிழமை அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ குறித்த சட்டமூலத்தின் அரசியல் யாப்பு விளக்கங்களை கோரி விசேட தீர்ப்பிற்காக பிரதம நீதியரசருக்கு அனுப்பியதையும், அதை 21.10.2011 வெள்ளிக்கிழமை பெற்றுக்கொண்ட உச்ச நீதிமன்ற பதிவாளர், அதனை விடுமுறை தினங்களுக்குள்ளேயே 24.10.2011 திங்கட்கிழமை அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்காக பட்டியலில் சேர்க்கப்பட்டது எவ்வாறு என்பதனையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.


President of Sri Lanka

My No. CSA/7/UB/2/2011

October 20, 2011

**Hon Chief Justice**
Chief Justice's Chambers
Supreme Court
Colombo 12.

My dear Chief Justice,

The Cabinet of Ministers has decided that, in its view, the Bill titled "An Act to provide for the vesting in the Government Identified Underperforming Enterprises and Underutilized Assets" is urgent in the national interest in terms of Article 122 (1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka.

I forward herewith 08 copies of the Bill bearing an endorsement to that effect under the hand of the Secretary to the Cabinet for the special determination of the Supreme Court under Article 122 (1) (b) as to whether the bill or any provision thereof is inconsistent with the Constitution.

Yours sincerely,

MAHINDA RAJAPAKSA

Democratic Socialist Republic of Sri Lanka


February 1998 authenticated by M. A. K. Mallawarachchi, Superintendent of Surveys of Gampaha on behalf of the Surveyor General of the land called Yakadawala Mukalana vested in the Board of Investment of Sri Lanka situated at Matalana Village within the Pradeshiya Sabhawa Limits of Attanagalla in the Udugaha Pattu of Siyane Korale in the District of Gampaha Western Province and which said allotment of land marked Lot 27 is bounded on the NORTH by the balance portion of Lot 5 in State Preliminary Plan No. 2776 and Lot 28 in Plan No. 599 by A. S. C. Vitanage, Licensed Surveyor; EAST by Lot 28 in Plan No. 500, Lot 1 in Plan No. 494 and Lot 26 in Plan No. 493 by A. S. C. Vitanage, Licensed Surveyor; SOUTH by Lot 26 in Plan No. 493 by A. S. C. Vitanage, Licensed Surveyor and the balance portion of Lot 5 in State Preliminary Plan No. 2776 and on the WEST by the balance portion of Lot 5 in State Preliminary Plan No. 2776 and containing in extent Three Acres and Sixteen Perches (A3-R0-P16) or One decimal Two Five Four Five Hectares (1.2545 Hec.) as per the aforesaid Plan No. 950.

**ENDORSEMENT UNDER ARTICLE 122 OF THE CONSTITUTION**

It is hereby certified that in view of the Cabinet of Ministers the above Bill is urgent in the national interest.

Sumith Abeysinghe
Secretary to the Cabinet of Ministers

**SUMITH ABEYSINGHE,**
**Secretary to the Cabinet.**

Date; October 20 2011.

21

**CERTIFIED TRUE COPY**

வெளிப்படையாகவே இந்த தனிநபர் சட்டமூலத்தினால் நேரடியாக பாதிக்கப்படும் நபர்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்களும் கொடுக்கப்படவில்லை என்பதானது, அரசியல் சாசனத்தின் பிரகாரம் அவர்களுக்கு இருந்த உரிமையையும் இயற்கை நீதியையும் மறுக்குப்படியாக அமைந்தது. உச்ச நீதிமன்றத்தின் பதிவாளருக்கு 21.10.2011 வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்ற இந்த சட்டமூலத்தின் தீர்ப்பு வழங்களானது வார விடுமுறை நாட்களுக்குள் திகதி குறிக்கப்பட்டு 24.10.2011 திங்கட்கிழமை உச்ச நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டமையானது இலங்கை பொது மக்களுக்கு இந்த சட்டமூலத்தை உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் அரசியல் யாப்பு உரிமையையும் மளுங்கடித்தது.

உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பானது, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையில் நீதியரசர்கள் PA ரத்நாயக்க,மற்றும், சந்திரா ஏக்கநாயக்க ஆகியோரால் வழங்கப்பட போது, சட்டமா அதிபர் ஒருவருக்கு மாத்திரமே அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததன் நிமித்தம், அவர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஆஜராகி இருந்தபோது அவரின் கருத்துக்களை மாத்திரமே செவிமடுத்தது. உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி குழாமானது சந்தேகங்கள் தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்பியபோது பிரதி சொலிசிட்டர் நாயகம் அதற்கான பதில்களை வழங்கியிருந்தார்.

எவ்வாறெனினும், இலங்கை அரசியல் யாப்பிற்கு முரணாக உச்ச நீதிமன்றமானது குறித்த சட்டமூலமானது இலங்கை யாப்பிற்கு முரணானதல்ல என தீர்ப்பளித்தமையானது, இலங்கை அரசியல் யாப்பின் 123(3) சரத்தின் பிரகாரம், ஒரு அவசர சட்டமூலம் தொடர்பிலான சந்தேகத்திற்கு முரணாக இலங்கை அரசியல் யாப்பிற்கு எதிராக அமைந்ததோடு உச்ச நீதிமன்றமானது தனது கடைமையை செய்யத் தவறியும் இருந்தமையை எடுத்துக் காட்டியது. ஆதாரம்

> *123 (3) சரத்து 122ல் குறிப்பிட்டுள்ளவாறு சட்டமூலமொன்று ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், உச்ச நீதிமன்றமானது சட்டமூலத்திலோ அல்லது ஒரு பகுதியிலோ அரசியல் யாப்பிற்கு முரணான அம்சங்கள் தொடர்பில் சந்தேகம் ஒன்றை எழுப்புகின்ற பட்சத்தில், குறித்த சட்டமூலமோ அதன் பகுதிகளோ அரசியல் சாசனத்திற்கு முரணானது என கருதப்படுவதோடு, உச்ச நீதிமன்றமானது இந்த சரத்தின் 1வது 2வது பந்திகளின் அடிப்படையில் செயற்படவும் வேண்டும்.*

இதனை தொடர்ந்து மேற்குறித்த சட்டமூலமானது பாராளுமன்றத்தின் கட்டளை பத்திரத்தில் 8.11.2011 அன்று உள்ளடக்கப்பட்டு மறு தினமே 9.11.2011 அன்று விவாதிக்கப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சகோதரரும், சபாநாயகருமான சாமால் ராஜபக்சவினால் சட்டமாக அவசரமாக கையொப்பம் இடப்பட்டு இருந்தபோதிலும், இந்த அங்கீகாரம் குறித்து பாராளுமன்றத்திற்கு 22.11.2011 அன்றே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆதாரம்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

*2011 නොවැම්බර් 22 වන අඟහරුවාදා*
*2011 நவம்பர் 22, செவ்வாய்க்கிழமை*
*Tuesday, 22nd November, 2011*

***පූ. භා. 9.30ට පාර්ලිමේන්තුව රැස් විය. කථානායකතුමා [ගරු චමල් රාජපක්ෂ මහතා] මූලාසනාරූඪ විය.***
*பாராளுமன்றம் மு.ப. 9.30 மணிக்குக் கூடியது. சபாநாயகர் அவர்கள் [மாண்புமிகு சமல் ராஜபக்ஷ] தலைமை வகித்தார்கள்.*
*The Parliament met at 9.30 a.m., MR. SPEAKER [THE HON. CHAMAL RAJAPAKSA] in the Chair.*

**නිවේදන**
அறிவிப்புக்கள்
ANNOUNCEMENTS

**I**

**කථානායකතුමාගේ සහතිකය**
சபாநாயகரது சான்றுரை
SPEAKER'S CERTIFICATE

**කථානායකතුමා**
**(சபாநாயகர் அவர்கள்)**
**(Mr. Speaker)**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 79 වැනි ව්‍යවස්ථාව අනුව, 2011 නොවැම්බර් මස 11 වන දින මවිසින් "ඌන ක්‍රියාකාරී ව්‍යවසායන් හෝ ඌන උපයෝජිත වත්කම් පුනරුදය කිරීමේ" නමැති පනත් කෙටුම්පතෙහි සහතිකය සටහන් කරන ලද බව දන්වනු කැමැත්තෙමි.

***(சிங்கள மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.)***

***சபாநாயகரின் ஒப்புதல்***

*"நான் இத்தால், குறைந்தளவில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் சரியான பாவனைக்குட்படுத்தப்படாத சொத்துக்களை மறுமலர்ச்சிக்கு உள்ளாக்கும் என பெயரிடப்பட்டு 11 நவம்பர் 2011 சமர்ப்பிக்கப்பட்ட சட்டமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பின் 79 வது சரத்திற்கு அமைய சட்டமாக்கப்பட்டுள்ளது என அறியத் தருகிறேன். "*

மேற்குறித்த விசாரமான சட்டத்தின் மூலம் இலங்கை அரசாங்கம் கைப்பற்றுவதற்காக இருந்த பட்டியலில் வேறே 77 காணிகளோடு ஹில்டன் ஹோட்டலின் உரிமை கம்பெனியான ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா மாத்திரமே ஒரேயொரு கம்பெனியாக குறிப்பிடப்பட்டிருந்தது.




இந்த மாறாட்டமான கைப்பற்றலானது ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்காவுக்கு இலங்கை அரசாங்கமானது ரூபா 12,000 மில்லியனை மீள் செலுத்தப்படவேண்டிய முற்பணமாக வழங்கியிருந்தமையை அடிப்படையாக கொண்டே இடம்பெற்றிருந்த போதிலும், குறித்த மீள் செலுத்தலுக்கு ஏற்கனவே 10.05.2011ல் திறைசேரியினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இரண்டு வருட கால அவகாசம்

கொடுக்கப்பட்டும் இருந்தது. இந்த 12,000 மில்லியன் ரூபாவில் 4,000 மில்லியன் மாத்திரமே மூலதனமாக இருந்ததுடன் ஏனைய 8,000 மில்லியன் ரூபா சேர்க்கப்பட்ட வட்டியாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.ஆதாரம்



திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
**Department of Treasury Operations** **A10(c)**

General Treasury, Ministry of Finance & Planning, P.O.Box 1559, Colombo 01.

Director | Fax 0094 112 320042, 0094 112 484828 | General 0094 112 484500, 0094 112 484600

My No. TO/Rev/SL/2/135Vol.iv | Your No. | Date 10.06.011

Mr. T.Nadesan,
Chairman,
Hotel Developers (Lanka) PLC.
C/o Colombo Hilton,
Colombo 01.

Dear Sir,

Loans Granted by the Government of Sri Lanka for the Settlement of the Loans to the Japanese Lenders Mitsui &Co Ltd .and Taisei Corporation.

This refers to your letter dated 6th May 2011 on the above subject.

It is regretted to inform our inability to accept the repayment schedule proposed by HDL, extending the repayment period for 18 years.

In view of the high occupancy ratio resulting in development of tourism industry, the General Treasury requests HDL to repay the outstanding amount of Rs.12,098,684,769.77 within a shortest period of time preferably two years, on monthly installment basis.

I, therefore, would request you to keep the Board of Directors informed of the Treasury's stand.

Thanking you,

Yours faithfully

D..Widanagamachchi
Deputy Secretary to Treasury

இதே நேரத்தில் நூலாசிரியர் ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்காவினை 20007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற நடைமுறை மேற்பார்வையின் கீழ் மறுசீரமைக்குமாறு ஒரு மனுவை கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் 8.11.2011 அன்று தாக்கல் செய்திருந்தார். அதேவேளை 8.11.2011 அன்று நூலாசிரியர் அத்தகைய தனக்கிருக்கும் நீதி அதிகாரம் குறித்து இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் சாமால் ராஜபக்சவிற்கும் அறிவித்தல் கொடுத்திருந்தார்.



DAILY MIRROR - Tuesday October 25, 2011

# BILL TO ACQUIRE UNDERUSED ENTERPRISES OR ASSETS

*DSG says it was not drafted by the Legal Draftsman's Dept. but by a private firm*

By S.S. Selvanayagam

LEGAL

In a surprise move, the government is to enact new laws to acquire underperforming enterprises and underutilized assets.

President Mahinda Rajapaksa has forwarded to the Supreme Court the draft Bill titled, "an Act to provide for the vesting in the State identified Underperforming Enterprises and Underutilized Assets", as an urgent Bill in the national interest.

The President could refer a draft bill to the Supreme Court for a ruling on its constitutionality before it is presented to parliament.

The draft bill was taken up yesterday before a Bench comprising Chief Justice Shirani A. Bandaranayake, Justices P.A. Ratnayake and Chandra Ekanayake.

See A6

An Act to provide for the vesting in the State identified Underperforming Enterprises and Underutilized Assets

MAHINDA RAJAPAKSA

- Bill becomes necessary in the national interest
- Competent Authority to control and administer process
- Those refusing to deliver, shall be guilty of offence

SMS your views & name 0777 009 998

## BILL TO ACQUIRE UNDERUSED ENTERPRISES OR ASSETS

Contd. from A1

The Supreme Court will communicate its determination to the President and the Speaker. Deputy Solicitor General Janak de Silva with Senior State Counsel Nerin Pulle appeared for the Attorney General.

**When the Chief Justice asked whether the Bill was drafted by the Legal Draftsman's Department, the Deputy Solicitor General said it was drafted by a private firm.**

The Chief Justice then told him that if that was the case there should be a representative from the Legal Draftsman's Department as well.

Under this Act, anyone who refuses or fails to deliver such Enterprises or Assets shall be guilty of an offence under the Act and shall on conviction after summary trial before a Magistrate be liable to imprisonment of ten years or a fine or both.

The Bill is to appoint in respect of each one or more of such underperforming enterprises or underutilized assets, a Competent Authority to provide for their effective managing, administration or revival through alternative utilization and the payment of compensation.

Under this Act, anyone who refuses or fails to deliver such Enterprises or Assets shall be guilty of an offence under the Act and shall on conviction after summary trial before a Magistrate be liable to imprisonment of ten years or a fine or both

இந்த ஆதாரபூர்வமான தரவுகளை வேண்டுமென்றே புறந்தள்ளி பாராளுமன்றத்தின் சபாநாயகர் மேற்குறித்த சட்டமூலத்தின் மீதான விவாதத்திற்கு மறுதினமான 9.11.2011 அன்று அனுமதியளித்து அதன் மூலம் குறித்த சட்டமூலத்தை 11.11.2011 அன்று சட்டமாக்கியதன் மூலம், ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா நிறுவனத்தை இலங்கை அரச உடைமையாகியமையானது, நீதித்துறையின் நடவடிக்கைகளை சட்ட உருவாக்கல் முறைமை பறித்துக்கொண்டதோடு, பாராளுமன்றத்தின் சபாநாயகர் நீதித்துறையின்

அதிகாரங்களை சட்டவாக்கல் துறை நசுக்கி செயற்பட்டதையும் காட்டியது. இந்த கருத்தினை இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான M.A. சுமந்திரன் சபாநாயகருக்கு எடுத்துக்காட்டிய போதிலும் அதனை சபாநாயகர் நிராகரித்தார்.

**PARLIAMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA**

**REVIVAL OF UNDERPERFORMING ENTERPRISES OR UNDERUTILIZED ASSETS ACT, No. 43 OF 2011**

**[Certified on 11th November, 2011]**

*Printed on the Order of Government*

Published as a Supplement to Part II of the **Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka** of November 11, 2011

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA
TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, COLOMBO 5

**Price : Rs. 22.00** **Postage : Rs. 20.00**

*Revival of Underperforming Enterprises or Underutilized Assets Act, No. 43 of 2011*

**SCHEDULE I**

UNDERPERFORMING ENTERPRISES

"Underperforming Enterprise" means a company or other authority, institution or body established by or under any written law for the time being in force, in which the Government owns shares and where the Government has paid contingent liabilities of such enterprise and the Government is engaged in protracted litigation with regard to such Enterprise, which is prejudicial to the national economy and public interest.

பாராளுமன்றத்தின் சபாநாயகர் குறித்த சட்டமூலத்திற்கு ஒப்புதல் வழங்கியிருந்தமையை அறிந்திராத நூலாசிரியர், ஏனெனில் இந்த ஒப்புதல் தொடர்பான அறிவித்தல் 22.11.2011அன்றே வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினால், 17.11.2001 அன்று குறித்த சட்டமூலத்தின் அரசியல் யாப்பு அங்கீகாரம் தொடர்பிலான வழக்கொன்றை உச்ச நீதிமன்றத்தில் இலங்கை அரசியல் யாப்பின் 123 (3) சரத்தினை அடிப்படையாக கொண்டும், குறித்த சட்ட மூலம் அவசரமாக உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்கு அனுப்பப்பட்டதனையும் மேற்கோள் காட்டி சபாநாயகர் இதற்க்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்பதனையும் வலியுறுத்தி தாக்கல் செய்தார்.

அதிர்ச்சிகரமாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் நீதியரசர்களான PA ரத்நாயக்க மற்றும் சந்திரா ஏக்கநாயக்க ஆகியோரின் ஒப்புதலோடு, குறித்த விண்ணப்பத்தில், இடையிட விரும்பின எவரும் குறித்த சட்டமூலத்தின் மீதான விசேட தீர்ப்பு விசாரணையின் போது இடைப்பட்டிருக்க வேண்டும் எனவும், குறித்த விசேட தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடையிட எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் குறிப்பொன்றை எழுதியிருந்தார்.

ஆனால் குறித்த சட்டமூலமானது 21.11.2001 அன்று உச்ச நீதிமன்றத்தின் பதிவாளருக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் 24.11.2011 திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டமையானது இடையில் இரண்டு வார இறுதி நாட்கள் இருந்தமையினால் இதனை சவாலுக்குட்படுத்த நடைமுறையில் சாத்தியம் இல்லாமல் இருந்தமைக்கான காரணங்களாகும். ஏன் உச்ச நீதிமன்றமானது இந்த இயலாமையை உணராமல் குறித்த தீர்ப்பு வழங்கலை வார இறுதி நாட்களை அண்மித்து திங்கட்கிழமை அன்று கொடுப்பதற்கு தீர்மானித்தது என்னும் நியாயமான சந்தேகம் எழுகின்றது.

அரசாங்கத்தின் ஒவ்வொரு அங்கங்களும் அடைப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசியல் யாப்பின் பிரகாரம் கட்டுப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டி 14.11.2011 அன்று நூலாசிரியர் பாதிக்கப்பட்ட நபராக உச்ச நீதிமன்றத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை 17 (1) சாசனத்திற்கு அமைய தனது இயற்கை நீதி உள்ளடங்கலான பல்வேறு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதனை மேற்கோள் காட்டி அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்தார். ஆதாரம்

*"சரத்து 17 (1)*

(1) *ஒவ்வொருவரும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ சொத்துக்களை உரிமை கொள்ளவதற்கான உரிமை உள்ளது*

(2) *எவரும் பலவந்தமாக ஒருவரது சொத்துக்களை அபகரிக்க முடியாது."*

*நூலாசிரியர் அக்டோபர் 2002ம் ஆண்டு 7 நீதிபதிகள் கொண்ட பின்வரும் உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பினை மேற்கோள் காட்டியிருந்தார்.*

*மேற்குறித்த விடயமானது அரசியல் யாப்பின் 18வது 19வது திருத்தங்கள் தொடர்பில், அப்போதைய பிரதம நீதியரசர் சரத் N .சில்வா தலைமையில் நீதியரசர்களான, JAN டி சில்வா,ஷிராணி பண்டாரநாயக்க, SWB வாடுகோபிடிய, A .இஸ்மாயில், P. எடூஸ்சூரிய மற்றும் HS யாப்பா அடங்கிய கர்த்தாக்களின் நீதிமன்றத்தில் விசேட தீர்ப்பு வழங்கலில் ஆழமாக ஆராயப்பட்ட விடயமாகும். கீழ் காணப்படும் பகுதிகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.*

- *ஆகவே அபகரிக்கப்பட்ட அனைத்தும் அரசியல் சட்டம் மற்றும் அரசியல் கோட்பாடுகளில், அரசியல் யாப்பிலுள்ள சரத்துக்கள் தொடர்பிலான வெளிப்படையான வியாக்கியானம் தொடர்பில், அரசியல் சாசனத்தினால் அரசாங்கத்தின் ஒரு அங்கத்திற்கு காரணத்தோடு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரமானது அரசாங்கத்தின் இன்னுமொரு அங்கத்திற்கு மாற்றப்படவோ, அல்லது ஒரு அங்கத்திலிருந்து துறக்கப்படவோ நீக்கப்படவோ முடியாது, அப்படியான துறத்தலோ, அல்லது நீக்கலோ, இலங்கை அரசியல் யாப்பில் காணப்படும் சரத்து 3 மற்றும் 4 கில் கொடுக்கப்பட்டுள்ள இறையாண்மையை மீறும் செயலாக கருதப்படும்.*

- *அரசாங்கத்தின் மூன்று அங்கங்களுக்குமிடையிலான அதிகாரங்களின் நடுநிலைமையை நேர்த்தியாக வைத்திருப்பது அவசியமாகின்ற அதேவேளை அதனூடாகவே அரசியலமைப்பின் நிலைப்படுதலை உறுதிப்படுத்த முடியும்.*

- *அரசியல் சாசனத்தினால் அரசாங்கத்தின் ஒரு அங்கத்திற்கு காரணத்தோடு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் துறத்தலோ, அல்லது நீக்கலோ, இலங்கை அரசியல் யாப்பில் காணப்படும் சரத்து 3 மற்றும் 4 கில் கொடுக்கப்பட்டுள்ள இறையாண்மையை மீறும் செயலாக கருதப்படும்.*

- *அரசாங்கத்தின் ஒரு அங்கத்திருக்கு மற்றய அங்கம் தொடர்பில் அதிகாரத்தை சோதனை செய்யும் வகையில் வழங்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு அதிகாரமானது மக்களின் நம்பிக்கை தொடர்பில் தேவையேற்படுகின்ற எல்லா வேலையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். இது ஒன்றும் நாவல் கோட்பாடு அல்ல. பொது சட்டத்தின் அடிப்படை தத்துவமே அதிகாரமானது நம்பிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒன்று என்பதாகும். இங்கிலாந்தின் நிர்வாக சட்டத்தின் பார்வையில், அதிகார வழங்கல் தொடர்பில் நம்பிக்கை என்பதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.*

  *பொதுமக்கள் தொடர்பிலான தேவைகளுக்கான சட்டரீதியான அதிகாரமானது நம்பிக்கை அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது- முற்றாக அல்ல- அப்படி கூறுகின்ற போது, அது நோக்கத்தோடு ஊகிக்கப்பட்ட சரியானதும் நேர்மையானதுமான காரணங்களுக்காக பாவிக்கப்படும்படிக்கு பாராளுமன்றமானது வழங்க வேண்டும் என பொருள்படும் ( நிர்வாக சட்டம், 8வது உள்ளடக்கம் Ed 2000- HWR வாட் CF போர்சித், p ,356)*

- *சட்ட அமுலாக்கம் என்பது எமது அரசியல் சாசனத்தின் அடிப்படியிலானதாகும் என்பது இந்த நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புக்களில் உறுதியாக கூறப்பட்ட ஒன்றாகும்.*

- AV *டைசி அரசியல் சாசனத்தின் சட்டம் என்பதிலே அனுமானிப்பதின் பிரகாரம், அரசியல் சாசனத்தின் அடிப்படையான கொள்கையான சட்ட அமுலாக்கம் என்பது மூன்று அர்த்தங்களை கொண்டிருக்கும் அவற்றில் ஒன்று பின்வருமாறு,*

  *"அதாவது, முதலாவதாக, சாதாரண சட்டத்தின் மேலாதிக்கமும் முன்னாதிக்கமும், தன்னிச்சையான அதிகார செல்வாக்கிற்கு முரணானதாக அமைவதோடு,அரசாங்கத்தின் பக்கம் இருக்கும் தன்னிச்சை தன்மையையும்,தனிச்சிறப்பையும், மற்றும் பரந்தளவில் காணப்படும் முடிவெடுக்கும் தன்மையையும் உள்ளடக்காது. பிரித்தானியர்கள் சட்டத்தினால் ஆளப்படுபவர்கள், சட்டத்தினால் மட்டுமே ஆளப்படுபவர்கள்...."*

- *அரசியல் சாசனம் பூராவும் ஒரு சாயம் ஓடுவதாக இருந்தால் அது சட்ட அமுலாக்கமேயாகும், மாத்திரமன்றி அரசியல் சாசனத்தின் பிரகாரம் நீதித்துறையானது, அரசாங்கத்தின் எல்லா அங்கங்களும் சட்ட வரையறைக்குட்படுவதனை உறுதி செய்வதன் மூலம் சட்ட அமுலாக்கத்திற்கு கருத்தாக்கதையும் பயனையும் கொடுப்பதனை உறுதி செய்யும் பொறுப்பினை கொண்டுள்ளது. (இந்திய தீர்ப்பிலிருந்து மேற்கோள்)*

- *அரசியல் யாப்பானது, அரசியல் யாப்பின் கீழ் உள்ள எந்தவொரு அரசாங்கத்தின் அங்கத்திற்கும் வரையறையற்ற விருப்பதையோ அல்லது அதிகாரத்தையோ கொடுக்கவில்லை.*

- *அரசியல் சாசனத்தின் நான்காவது சரத்தின் பிரகாரம் அரசியல் சாசனத்தை பாதுகாக்கவும் பேணவும் இந்த ஒதுக்கீட்டுக்கு நாம் செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.*

*மேலும் நூலாசிரியர் பின்வரும் மேற்கோள்களையும் முன்வைத்திருந்தார்*

- *ராஜஸ்தான் மாநிலம் எதிர் இந்திய கூட்டமைப்பு* AIR 1977 SC 1361,1413 *வழக்கில்* J *பகவதியின் தீர்ப்பு* :

  *"அரசியலமைப்பின் கீழ் உள்ள ஒரு துறை அதிகாரங்களுக்கு உட்பட்டுள்ளதா அல்லது மீறியுள்ளதா என்கின்ற கேள்வி எழுகின்ற போது நிச்சயமாக நீதிமன்றத்தினால் அதற்கான தீர்ப்பினை வழங்க முடியும்,அதேவேளை அரசியல் சாசனத்தின் பிரகாரம் அது கடமையாகும்.அரசியலமைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் எல்லையை தீர்மானிக்கும் அதிகாரத்திலோ அல்லது அந்த எல்லைக்குள் செயற்படுகிறார்களா என்பதை தீர்மானிக்கும் எந்தவொரு அதிகாரமோ உயர் பதவியோ இல்லை. இந்த நீதிமன்றமே அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யும் அதியுச்ச இடமாகும். அரசியலமைப்பின் பெறுமதியினையும் அரசியலமைப்பின் எல்லைகளை வரையறை செய்யவும் இந்த நீதிமன்றினாலேயே முடியும். சட்ட அமுலாக்கத்தின் பதமும் அதுவேயாகும்"*

- SC FR *இல* 431/2001 *ன் தீர்ப்பு*

  *"அரச அதிகாரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும், விருப்புக்களும் பொது மக்களின் நம்பிக்கை அடிப்படையில் வழங்கப்பட்டவை எனவும், அவை நியாயமான முறையிலும், நல்லெண்ணத்திலும்,சட்ட பூர்வமாகவும், சரியான இடங்களிலே பொதுநல அடிப்படையிலும் பிரயோகிக்க படவேண்டும் என்பதும், அவை வரையறை அற்றதாகவோ, தன்னிச்சையானவையோ, அல்லது மீள் பரிசீலனை செய்யப்பட முடியாதவையாகவோ அல்லாமலும், அவற்றின் பிரயோகமும் உரிமையும் சட்டவாக்கமும் வை என்ன நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கெதிராக நியாயம் தீர்க்கப்படவும் கூடியவை என்பது தெளிவாக புலப்படுகிறது"*

*நூலாசிரியரின் மேற்குறித்த அடிப்படை உரிமை மீறல் வழக்கானது இலங்கை உச்ச நீதிமன்றத்தில் அவர் தனிப்பட்ட முறையில்* 25.11.2011 *அன்று ஆஜராகி ஆதரவு செய்திருந்தார். அவர் உச்ச நீதிமன்றத்தின்* 24.10.2001 *திகதி வழங்கப்பட்ட விசேட தீர்ப்பானது, இலங்கை அரசியல் சாசனத்தின்* 123 (3) *சரத்தின் பிரகாரம் அரசியல் யாப்பிற்கு எதிரானது என வாதாடியதுடன், உச்ச நீதிமன்றமானது அரசியல் யாப்பின் அலுவலகம் என்ற அடிப்படையில் அந்த தீர்ப்பானது செல்லுபடியற்றதும், ஏற்க முடியாததொன்றும் என தெரிவித்தார்.*

*நூலாசிரியர் உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பணங்களை செய்து, குறித்த* 24.11.2001 *அன்று வழங்கிய விசேட தீர்ப்பில் உச்ச நீதிமன்றமானது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருந்தமையும், அந்த கேள்விகளுக்கு பிரதி சொலிசிட்டர் நாயகம் பதிலளித்திருந்தமையும் வெளிக்காட்டப்பட்டுள்ளதை சுட்டி காட்டியதுடன், அரசியல் சாசனத்தின்* 123 (3) *சரத்தின் பிரகாரம் அந்த சந்தேகங்களும் அதற்க்கு கொடுக்கப்பட்ட பதில்களுமே இந்த சட்டமூலமானது அரசியலமைப்பிற்கு முரணானதும், ஒவ்வாததும் என தீர்ப்பளிக்கும் எனவும் தெரிவித்தார்.*

*நூலாசிரியர் அரசியலமைப்பின்* 80 (3) *சரத்தானது பாராளுமன்ற சட்டத்தை மாத்திரமே குறிக்கின்றது எனவும்,அது உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பை உள்ளடக்கவில்லை எனவும்,குறித்த விசேட தீர்ப்பானது மீண்டும் உச்ச நீதிமன்றத்தினால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம் என்பதனையும் விளக்கி வெற்றிகரமாக வாதாடினார். ஆதாரம்*

> "80 (3) *சட்டமூலமானது ஜனாதிபதியினாலோ அல்லது சபாநாயகரினாலோ அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு நீதிமன்றமோ அதிகாரமோ எந்தவொரு அடிப்படையிலும் அது குறித்து கேள்வி எழுப்பவோ விசாரணை செய்யவோ முடியாது."*

*நீதியரசர்* N.G. *அமரதுங்க தலைமையில் நீதியரசர்களான சுரேஷ் சந்திர, மற்றும் சத்யா ஹெட்டிகே அடங்கிய உச்ச நீதிமன்றத்தின் குழுவானது, நூலாசிரியரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு ஆமோதித்து, பிரதிவாதிகளுக்கு உச்ச நீதிமன்றத்தின் பதிவாளரின் ஊடாக அறிவுறுத்தல்களை அனுப்பவும், நூலாசிரியர்* 14.11.2011 *தாக்கல் செய்த இந்த மனு தொடர்பிலான சட்டமானது சபாநாயகரினால்* 22.11.2011 *அன்றே சட்டமாக அறிவிக்கப்பட்டதனை கருத்திற்கொண்டு நூலாசிரியருக்கு அவரது மனுவை திருத்தி மீள சமர்ப்பிக்கும் உரிமையையும் அளித்தது.*

அதற்கமைய நூலாசிரியர் உச்ச நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கமைய தனது மனுவை 16.12.2011 அன்று பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கொடுக்கும்படிக்கு மீள் சமர்ப்பித்தார் செய்தார்.26.1.2012 இற்குள் பதிலளிக்கும்படியாக உச்ச நீதிமன்றத்தின் பதிவாளரினால் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டது.

இந்த விண்ணப்பமானது 24.11.2011 அன்று வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்யும் ஒன்றாக காணப்பட்டதால், நூலாசிரியர் அரசியல் யாப்பின் 132 வது சரத்தின் பிரகாரம் பிரதம நீதியரசருக்கு உச்ச நீதிமன்றின் முழுமையான குழுவை நியமித்து இந்த மீளாய்வினை செய்யும்படியான விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்தார்.

எவ்வாறெனினும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் நூலாசிரியரின் உச்ச நீதிமன்றின் முழு குழுவும் இந்த மீளாய்வு விண்ணப்பத்தை விசாரிக்கும்படிக்கான கோரிக்கையை நிராகரித்து, நூலாசிரியரின் விண்ணப்பத்தை ஏற்று பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பிய நீதிபதிகளான NG அமரதுங்க சுரேஷ் சந்திர சத்யா ஹெட்டிகே ஆகியோர் முன்னிலையில் 9.2.2012 அன்று விசாரணைக்கு எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

கீழ்க்காணும் நபர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தார்கள். பிரதி சொலிசிட்டர் நாயகத்திற்கு மேலதிகமாக ஜனாதிபதி சட்டத்தரணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சிரேஷ்ட்ட சட்ட ஆலோசகருமான DS விஜேசிங்க அவர்களும் பிரதிவாதிகளுக்காக ஆஜராகியிருந்தார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, நிதியமைச்சர் என்ற வகையில்
பசில் ராஜபக்ச, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்
P.B ஜயசுந்தர, செயலாளர் நிதியமைச்சு, செயலாளர் திறைசேரி
G.L பீரிஸ், வெளிவிவகார அமைச்சர்
C.R டி சில்வா, ஜ. ச ,முன்னாள் சட்டமா அதிபர்
மொஹான் பீரிஸ், ஜ. ச, முன்னாள் சட்ட மா அதிபர்
ரவுப் ஹக்கீம், நீதியமைச்சர்
சுஹத கமலத், செயலாளர் நீதியமைச்சு
சாமால் ராஜபக்ச, சபாநாயகர் இலங்கை பாராளுமன்றம்
கௌரவ சட்டமா அதிபர்

உச்ச நீதிமன்றத்தின் குழுவை ஏற்றுக்கொள்ள வைக்கும் வகையில் நூலாசிரியர் நீண்ட வாய்மூல சமர்ப்பணத்தையும் அதற்க்கு ஆதரவாக நீண்ட எழுத்துமூல சமர்ப்பணங்களையும் செய்தார்.

நூலாசிரியர் தனது பல்வேறு விடயங்கள் அடங்கலான சமர்ப்பணத்தில் 7 மாவட்டங்களில் 36 நிறுவனங்கள் அமைந்திருக்கும் இலங்கை அரசின் வசமுள்ள பின்வரும் 77 நிலங்கள் தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார்.

| | |
|---|---|
| மேல்மாகாணம் | 32 நிலங்கள் |
| ஊவா மாகாணம் | 35 நிலங்கள் |
| வடமத்திய மாகாணம் | 2நிலங்கள் |
| மத்திய மாகாணம் | 2 நிலங்கள் |
| சபரகமுவ மாகாணம் | 3நிலங்கள் |
| கிழக்கு மாகாணம் | 1 நிலம் |
| தென் மாகாணம் | 2 நிலங்கள் |

மேற்குறித்தவை அரசியல் யாப்பிற்கு இசைவானது எனவும், ஏனெனில் வெளிப்படையாக 'தேசிய கொள்கையின்" கீழ் அனைத்து விடயங்களும் மத்திய அரசின் கீழ் உள்ளமையினாலும் மேற்குறித்த விடயமானது 'தேசிய கொள்கை' விடயமாதலால் இது அரசியல் யாப்பிற்கு முரணானதல்ல என வெளிப்படுகிறது ! எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நூலாசிரியர் அரசியல் யாப்பின் 154 (G) (7) இந்த பிரகாரம் காணிகள் தேசிய கொள்கை என்ற கட்டமைப்பிற்குள் உள்ளடங்காது என்பதனையும், சரத்து 154 (G) (3) இன்படி காணிகள் மாகாண சபைகளின் கீழ் வரும் ஒரு விடயம் என்பதனையும் தெளிவுபடுத்தியதுடன், குறித்த சட்டமூலத்தை ஜனாதிபதி அவர்கள் அனைத்து மாகாண சபைகளுக்கும் அனுமதிக்காக அனுப்பியிருக்க வேண்டும்

எனவும் அப்படி செய்வதானது உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் கடைபிடித்த வழக்கத்திற்கு மாறானது எனவும் தெரிவித்ததோடு, அப்படி செய்யாமல் விட்டமையானது அவசரமாக வேறே தேவைக்காக ஏமாற்று வழியில் கொண்டு வரப்பட்ட ஒன்றா என்ற கேள்விக்கு வலு சேர்க்கிற ஒன்றாக அமையவில்லையா?

சர்வதேச உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் மீறும் வகையிலான இந்த தீர்ப்பானது முரணானது அல்ல என குறிப்பிடப்பட்டிருந்த போதும், நூலாசிரியர் அரசியல் யாப்பின் 157 வது சரத்து இப்படியான நடவடிக்கையினை பொது தேவைக்கான தேசிய பாதுகாப்பு கருதி மாத்திரமே செய்யலாம் என்பதனையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எப்படியாயினும்,நூலாசிரியரின் சமர்பணத்தை 9.2.2012 அன்று செவிமடுத்த மூவர் அடங்கிய உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் குழுவானது குறித்த 24.10.2011 அன்று விசேட தீர்ப்பினை வழங்கிய அதே நீதிபதிகள் குழுவானது மீள் பரிசீலனை வழக்கை விசாரிக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டமைக்கான ஒரு சமிக்கையை குறித்த வழக்கை தீர்ப்பு வழங்கிய அதே குழுவே மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என தெரிவித்ததன் மூலம் கொடுத்திருந்தார்கள்.

மேற்குறித்த பின்னணியில் மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் நூலாசிரியர், தான் அரசியல் யாப்பின் 132வது சரத்தின் பிரகாரம், 18.1.2012 அன்று அரசியல் யாப்பின் 123 (3) சரத்துக்கு எதிராக வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்வதற்காக வழக்கினை விசாரிப்பது தொடர்பில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு மனுவொன்றை பொது முக்கியத்துவம் கருதி அனுப்பி வைத்ததனை தெரிவித்தார்.

இது தொடர்பான தரவுகளை தேடிப்பார்த்ததன் பின்னர், மிகவும் அதிர்ச்சிகரமான முறையில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமானது, நூலாசிரியரின் இவ்வழக்கை செவிமடுக்க மாத்திரமே தம்மை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணித்திருப்பதாகவும் இந்த வழக்கை முன்னெடுத்து செல்வதற்கு அனுமதி கொடுக்கவில்லை எனவும் தெரிவித்தார்கள். உச்ச நீதிமன்றத்தின் இன்னுமொரு நீதிபதி குழாமிற்கு முன் வழிகாட்டல் செய்வதற்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எவ்வித உரிமையும் இல்லை.

உச்ச நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகளது அத்தகைய மிரட்டலைத் தொடர்ந்து, 'வழக்கை முன்னெடுத்து செல்வதற்கு அனுமதி கொடுப்பது இல்லை என முன்னரே தெரிந்திருந்தால், நூலாசிரியரை ஏன் அவ்வளவு நீண்ட கடினமான சமர்ப்பணங்களை உச்ச நீதிமன்றத்திற்கு முன்னால் சமர்பிக்கும்படி கேட்டார்கள்' ? என்னும் கேள்வியை அங்கிருந்தோர் அமைதியாக விளித்தனர்.

உச்ச நீதிமன்றின் மூவரடங்கிய நீதிபதிகளின் மிரட்டலை தொடர்ந்து, அதற்கு பதிலளிக்கும் வகையில், நூலாசிரியர் பிரத்தியேகமான மேலதிக ஆதாரங்களின் அடிப்படையில் 24.10.2011 இல் கொடுக்கப்பட்ட விசேட தீர்ப்பில் ஒரு மீளாய்வை அல்லது மாற்றத்தை வலியுறுத்தி நீதித்துறை பக்கச்சார்பானது என்னும் பார்வையில், எழுத்துமூல சமர்ப்பணத்தை செய்தார், இதற்கு ஆதாரமாக பினோசெட் வழக்கில் கர்த்தாக்களின் சபையின் ஐவரடங்கிய குழுவின் தீர்மானத்தை புறந்தள்ளி கர்த்தாக்களின் சபையின் மேன்முறையீட்டு கர்த்தாக்கள் தமது நீதி உள்ளார்ந்ததை பாவித்து அநீதியான தீர்ப்பினை மாற்றியிருந்ததை மேற்கோள் காட்டி இரகசியமானவை என சமர்ப்பித்தார்.

HOUSE OF LORDS

**பினோசெட் வழக்கின் தீர்ப்பு**

**பிரௌன் வில்கின்ஸன் பிரபு**
**சீவெளியின் கோப் பிரபு**
**நோலன் பிரபு**
**கிரெய்க்ஹெட் இந்த ஹோப் பிரபு**
**ஹட்டன் பிரபு**

உண்மையில் நூலாசிரியர் தனது பிரத்தியேக சமர்ப்பிப்பில், பினோசெட் வழக்கு தீர்ப்பில் கர்த்தாக்கள் சபையில் வெளிக்கொணரப்பட்ட நீதித்துறையின் பாகுபாட்டினை காட்டிலும், தான் சமர்ப்பித்த ஆதாரங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் பாகுபாடானது மிகவும் பாரதூரமானது என்பதனை காட்டியிருந்தார்.

மேற்குறித்த கர்த்தாக்கள் சபை தீர்ப்பினை போல நீதித்துறையானது பக்கச்சார்பானது என்பதனை மிகவும் ஆணித்தரமாக வெளிக்காட்டி ஆகையினாலே 24.10.2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பில் ஒரு மாற்றத்தை வலியுறுத்திய நூலாசிரியரின் பிரத்தியேக சமர்ப்பணத்தை கண்ட பிரதி சொலிசிட்டர் நாயகமும், ஜனாதிபதி சட்டத்தரணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சிரேஷ்ட்ட சட்ட ஆலோசகருமான DS விஜேசிங்க அவர்களும் ஆடிப்போனதுமன்றி மிகவும் துரிதமாக நூலாசிரியரின் இந்த சமர்ப்பிப்பை எதிர்த்தார்கள் . குறித்த இந்த பிரத்தியேக சமர்ப்பனமானது பொதுவில் தெரிய வருகிற போது அது பொது மக்கள் இடையே முரண்பாட்டை தோற்றுவிக்கும் என அச்சத்தை வெளிக்காட்டினார்கள்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமானது நூலாசிரியரின் சமர்பணத்தின் அனைத்து பிரதிகளையும் மீள கொடுக்குமாறு பணித்தது. திறந்த நீதிமன்றத்திலே பொதுநலன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட சமர்ப்பணமானது சட்டபூர்வமாகவும் சரியான முறையிலும் தெரிந்திருக்க வேண்டிய பொது மக்களிடமிருந்து ஏன் அடைக்கப்பட்டு மறைக்கப்படவேண்டும்? உச்ச நீதிமன்றின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமானது நூலாசிரியரின் மனுவை ஏற்றுக்கொள்வதற்கோ கையாள்வதற்கோ தமக்கு அதிகாரம் இல்லை என தெரிவித்தது.

அரசியல் சாசனத்தின் 123 (3) சரத்தின் பிரகாரம் பொது நல முக்கியத்துவம் வாய்ந்த 24.0.2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்யும்படிக்கான உச்ச நீதிமன்றத்தின் ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாமை நியமிக்குமாறு அரசியலமைப்பின் 132ம் சரத்திற்கமைய நூலாசிரியர் 18.01.2012 கொடுத்த விண்ணப்பதிற்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஏன் அனுமதியளிக்கவில்லை என்னும் கேள்வி மேலும் பெருத்தது.

மேற்குறித்த நடவடிக்கையானது 2009 ஆகஸ்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உந்துதலின் பேரில் PB ஜயசுந்தரவை நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளராக மீண்டும் பதவி ஏற்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட தனிநபர் சார்ந்த மனுவினை விசாரித்து தீர்ப்பு வழங்க உச்ச நீதிமன்றத்தின் எழுவரடங்கிய நீதிபதிகள் குழாம் மிக துரிதமாக நியமிக்கப்பட்டமைக்கு நேர் எதிராக இருந்தது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2010ம் ஆண்டின் மனித உரிமைகள் - இலங்கை அறிக்கையின் 25ம் 26ம் பக்கங்களில் காணப்பட்ட மிக முக்கியமான 'பகுதிகள்' கீழ்வருமாறு:

> **"பகுதி 4: உத்தியோகபூர்வ ஊழலும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையும் "**
>
> "உத்தியோகபூர்வ ஊழல்களிற்கு சட்டத்தில் குற்றவியல் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது: எவ்வாறெனினும் அரசாங்கம் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதோடு, மூன்று கிளைகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள் அடிக்கடி மோசடியான நடவடிக்கைகளில் குற்றத்திலிருந்து தப்பும் அதிகாரத்தோடு ஈடுபடுகிறார்கள்."
>
> "2008ம் ஆண்டில் உச்ச நீதிமன்றமானது அன்றைய திறைசேரியின் செயலாளரான PB ஜயசுந்தர அவர்களை கொழும்பு துறைமுகத்தின் விரிவாக்கம் தொடர்பிலான பாரிய ஒப்பந்தமொன்றினை வழங்கியபோது முறையான நடைமுறைகளை பின்பற்றாமல் மீறியிருந்தார் என்பதனை கண்டுபிடித்து அவரை குற்றவாளியாக தீர்ப்பளித்தது.நீதிமன்றமானது அவர் திறைசேரியில் பதவி வகிப்பதை தடுத்திருந்தது.2009ல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உச்ச நீதிமன்றத்திற்கு புதிய பிரதம நீதியரசரை நியமித்ததன் பின்னர் உச்ச நீதிமன்றமானது முதற்கொடுக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்ய அனுமதித்திருந்தது. உச்ச நீதிமன்றமானது முன்னைய தீர்ப்பினை தலை கீழாக மாற்றி ஜயசுந்தர அவர்களை மீண்டும் திறைசேரியின் செயலாளராக நியமித்தது."

உடனடியாக 9.2.2012 மூவரடங்கிய உச்ச நீதிமன்றத்தின் முடிவினை செவிமடுத்ததன் பின்னர் அடுத்தே நாளே 10.2.2012 அன்று நூலாசிரியர் முதன் நாள் 9.2.2012 உச்ச நீதிமன்றத்தில் தனது சமர்ப்பணங்கள் தொடர்பிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் குறிப்பொன்றினை மேற்கொண்டார்.

நூலாசிரியரின் புத்தகத்தில் தொடர்ந்தது-




***Amazon Books– [‘Politics, Justice & the ‘Rule of Law’](#)***

அதற்கமைய நூலாசிரியர் 8.5.2012ல் மேற்குறித்த தனது குறிப்புகள் மற்றும் பிரத்தியேக சமர்ப்பணம் உள்ளடங்கலான சமர்ப்பணங்கள் போன்றவற்றை முன்வைத்து மேற்குறித்த தீர்ப்பில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி ஏற்கனவே நீக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தின் அறிக்கைகளில் சேர்க்கும் முகமாக மேலுமொரு மனுவொன்றை தாக்கல் செய்தார்.

நூலாசிரியரின் அத்தகைய மீள் பரிசீலனை மனுவானது தலைமை நீதிபதி NG அமரதுங்கவினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இது தொடர்பில் அவரது அறையில் அவர் கீழ்வருமாறு குறிப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

D/RSC

இந்த விண்ணப்பம் 9.2.2012இல் நிராகரிக்கப்பட்டு விட்டது. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீதான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபட முடியாதவையாகும்.

ஒப்பம்
14/05/2012

அதேவேளை இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் சாமால் ராஜபக்ச அவர்கள் இலங்கை பாராளுமன்றத்தின் அனைத்து கட்சி தலைவர்களினதும் ஆலோசனைகளையும் அனுமதியையும் பெற்று உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்கெதிராக ஒரு கட்டளையை 9.10.2012ல் பிறப்பித்திருந்தார்.



HON. CHAMAL RAJAPAKSA
Speaker, Parliament of Sri Lanka
RULING GIVEN ON 9TH OCTOBER 2012

பாராளுமன்றத்தின் சபாநாயகர் தன்னுடைய கட்டளையிலே, அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குடிமகனின் உரிமையானது முழுவதுமாக நடைமுறையில் இருக்கும் வகையில் வழங்கப்பட்ட விசேட தீர்ப்புக்களை உச்ச நீதிமன்றம் மீளாய்வு செய்வதினை உண்மையான கவனத்திற் கொள்ள வேண்டுமெனவும், அதைப்போலவே சுகு நீதிமன்றம் விட்ட நிஜமான பிழைகளை திருத்தியமைப்பது அவசியம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த பின்னணியில் நூலாசிரியர் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறியதும், சட்ட அமுலாக்கத்தையும் இயற்க்கை நீதியையும் குறைவாய் எடைபோட்ட பொதுநலனில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த 24.10.2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பிக்கெதிராக முக்கியமான முன்னெடுத்தலை கொண்டு செல்ல தீர்மானித்தார்.

அதனடிப்படையில் பாராளுமன்றத்தின் சபாநாயகரின் கட்டளைக்கமைய நூலாசிரியர் 18.10.2012ல் அரசியலமைப்பின் 132 வது சரத்திற்கமைய 24.10.2011ல் வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்யும்படிக்கான மனுவொன்றினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதனை விசாரிக்குப்படிக்கான திகதியை வேண்டி நின்றார்.

எவ்வாறாயினும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் எழுதிய குறிப்புகளை ஆய்வு செய்த போது, பாராளுமன்றத்தின் சபாநாயகரின் விசேட தீர்ப்புக்கள் குறித்த கட்டளையானது கவனத்திற்கொள்ளப்படாமலும், அதிர்ச்சிகரமான முறையில் அது கையாளப்படாமலும் இருந்துள்ளது.

<u>கௌரவ.K ஸ்ரீபவன் J</u>

AAL மனுதாரரின் 18.10.2012 திகதியிடப்பட்ட மனு

1. மனுவும் பட்டியல்களும் "X ", "Y" & "Z"
2. ஆவணங்கள்
3. சத்திய கடதாசி
4. "X" குறிப்பிடப்பட்டுள்ளவற்றிக்கு ஆதாரமான விசேட சத்திய கடதாசி

AAL ஆனது இந்த விண்ணப்பத்தினை 24.10.2011ல் கர்த்தாக்களால் வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்யும்படிக்கான இந்த விண்ணப்பத்தினை நவம்பர் 2012, 16,19,20ம் திகதிகளில் விசாரணைக்கு எடுக்குமாறு கர்த்தாக்களை வேண்டிக்கொள்கிறது.

DRSC

19.10.2012

***கௌரவ பிரதம நீதியரசர்***

*24.0.2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்யும்படியான 18.10.201 அன்று திகதியிடப்பட்ட மனுவொன்றினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுவின் 9 (h) ன் பிரகாரம் சபாநாயகர் குறித்த சட்டமூலத்தினை 11.11.2011 அன்று ஒப்புதல் செய்துள்ளார். சரத்து 80 (3) ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டதும், அது சட்டமாக மாற்றமடைவதனால் அதன் சட்டத்தன்மையை எந்தவொரு அடிப்படையிலும் கேள்விக்குள்ளாக்க முடியாது.*

*சரத்து 80 (3) ஆனது குறிப்பிடப்பட்டுள்ள அதன் உண்மையான நோக்கத்தினையும் வெளிக்காட்டப்பட்டுள்ள வார்த்தை ஜாலங்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.*

*நீதித்துறை மற்றும் நீதிபதிகள் குழாமில் ஒருவர் பாரபட்சமானவர் அல்லது தேர்ச்சியற்றவர் என ஒரு சாரார் கருதினால் அவர்கள் அந்த எதிர்ப்பினை சட்டமூலமானது செவிமடுக்கப்பட்ட வேலையில் தெரிவித்திருக்க வேண்டும். ஆரம்ப கட்டத்தில் எதிர்ப்பினை வெளிக்காட்டவில்லையாயின், அதற்குப்பின்னர் அந்த சாரார் விடயத்தினை வெளிக்கொணர்ந்து குற்றம் சாட்ட முடியாது, அப்படி செய்கின்றபோது உண்மையான பாரபட்சத்திற்கு அது வழிவகுக்கும் அபாயத்தினை கொண்டுவரும்.ஆணித்தரமான அடிப்படை இல்லாத எந்தவொரு காலங்கடந்த பின்னர் எடுக்கப்படும் அற்ப எதிர்ப்புக்கள் நீதிமன்றத்தின் நிர்வாகத்தில் தாமதத்தினை ஏற்படுத்துவதோடு, நீதிமன்றத்தின் வேலையையும் குறைத்து மதிப்பிடும்.*

*மேற்குறித்த பார்வையில் 18.10.2012 திகதியிடப்பட்ட இந்த மனுவை ஏற்றுக்கொள்வதற்கான எந்தவொரு சட்ட அடிப்படையையும் நான் காணவில்லை. எனவே இந்த மனு உடனடியாக நிராகரிக்கப்பட முடியும்*

*கையொப்பம்*

*ஸ்ரீபவன் J*

22.10.2012

***கௌரவ அமரதுங்க J , கௌரவ ரத்நாயக்க ஜ ச, J , கௌரவ ஏக்கநாயக்க J***

*கௌரவ ஸ்ரீபவனின் கணிப்பை நான் ஆமோதிக்கிறேன். கேள்வியில் இருக்கும் இந்த சட்டமூலமானது இந்த நீதிமன்றத்தினால் 24.10.2011 அன்று கருத்திற்கொள்ளப்பட்டு பின்னர் 11.11.2011 அன்று சபாநாயகரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 80 (3) இந்த பிரகாரம் அப்படியான சட்டமானது எந்தவொரு அடிப்படையிலும் கேள்விக்குள்ளாக்கப்பட முடியாது.*

*எவரும் 24.11.2011 அன்று இதனை விசாரித்த மூன்று நீதிபதிகளுக்கும் எதிராக எந்த கேள்வியையும் எழுப்பவில்லை. மேற்குறித்த காரணங்களுக்காக 18.10.2012 திகதியிடப்பட்ட இந்த மனு இலகுவாக நிராகரிக்கப்பட முடியும். இந்த மனு குறித்து தயவு செய்து தங்களது கருத்துகளையும் ஒப்புதலையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*கையொப்பம்*

*பிரதம நீதியரசர்*

23.10.2012

***கௌரவ. பிரதம நீதியரசர்***

*தங்களதும் கௌரவ ஸ்ரீபவனினதும் கருத்துக்களை நான் ஆமோதிக்கிறேன். 18.10.2012 திகதியிடப்பட்ட மனுவிற்கான எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லாமையினால் அது இலகுவாக நிராகரிக்கப்படும். உச்ச நீதிமன்றத்தின் பதிவாளருக்கு இந்த விடயம் தொடர்பில் எந்தவொரு மனுவையோ விண்ணப்பத்தினையோ ஏற்க கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.*

*கையொப்பம்*

*அமரதுங்க*

24.10.2012

***கௌரவ. பிரதம நீதியரசர்***

*தங்களதும் கௌரவ ஸ்ரீபவனதும் கௌரவ அமரதுங்கவினதும் கருத்துக்களை ஆமோதிக்கிறேன்.*

*கையொப்பம்*

P.A. *ரத்நாயக்க*

25.10.2012

**<u>கௌரவ. பிரதம நீதியரசர்</u>**

தங்களது 23/10/2012 திகதியிடப்பட்ட கருத்தோடும், வழிகாட்டலோடும், கௌரவ நீதியரசர் அமரதுங்கவின் 24.10.201 திகதியிடப்பட்ட கட்டளையோடும் கௌரவ நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களது 22/10/2012 திகதியிடப்பட்ட கட்டளையோடும், கவுரவ நீதியரசர் P.A. ரத்னாயக்காவின் 25/10/2012திகதியிடப்பட்ட கட்டளையோடும் உடன்படுகிறேன்

கையொப்பம்

ஏக்கநாயக்க

7.11.2012

*அரசியலமைப்பின் 132ம் சரத்தின் பிரகாரம் நூலாசிரியரின் குறித்த மீள்பரிசீலனை மனுவானது மற்ற நீதிபதிகளினால் அல்ல மாறாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவினால் மாத்திரமே முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது.*

*இதில் புதிரான விடயம் என்னவெனில் பட்டியலிடப்பட்டிருந்த நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் நடைமுறைப்படி குறித்த விண்ணப்பத்தை பிரதம நீதியரசருக்கு அனுப்புவதற்கு முன்னர் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டிருந்த ஆணையினை தனது கையில் எடுத்து குறித்த மனு தொடர்பிலான தனது விஜாக்கியானத்தினை முன் நடந்து முன்வைத்திருந்தார். இதனை செய்ததன் மூலம் நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் அரசியலமைப்பின் 80 (3) சரத்தினை தனது அறையில் இருந்தவாறு தன்னிச்சையாக வியாக்கியானம் செய்துள்ளார், அரசியல் சாசனத்தின் தீர்மானங்கள் உச்ச நீதிமன்றத்தின் முழுமையான நீதிபதிகள் முன் பொதுவான கேள்விக்குட்படுத்தப்பட்டு அல்லவா தீர்ப்பளிக்கப்பட வேண்டும்?*

*'நீதித்துறை பாரபட்சமானதும் தேர்ச்சியற்றதும்' என்கிற கருத்தை காலம் கடந்த பின்னர் முன்வைத்துள்ளார்கள் என்கிற கருத்தினை சொல்லுகின்ற போது நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் தன்னைத்தானே பிழையாக வழிகாட்டி கொள்கிறார், ஏனெனில் நூலாசிரியர் 9.2.2012 இலேயே முதன் முறையாக இந்த விடயம் தொடர்பில் நீதியரசர் அமரதுங்க தலைமையிலான மூவரடங்கிய உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் முன்னிலையில் எடுத்துரைத்திருந்தார் என்பதனை அவர் தன்னுடைய சிந்தையிலே கொண்டிருக்கவில்லை.*

*'நீதித்துறை பாரபட்சமானதும் தேர்ச்சியற்றதும்' என்கிற கருத்தை ஒரு 'அற்ப' விடயமாக கருதி நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் கேவலப்படுத்தியிருந்தாலும், அதன் பின்னர் ஒரு சில நாட்களில் 117 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட பிரதம நீதியரசரை நீக்கும் குற்ற பிரேரணைக்கு சபாநாயகர் அவர்கள் 1.11.2012 அன்று ஒப்புதல் அளித்திருந்தார்கள். அதிலே குறிப்பிடப்பட்டிருந்த ஒரு குற்றம் யாதெனில் அவர் பாரபட்சமானவரும் தேர்ச்சி அற்றவரும் என்ற குற்றச்சாட்டு அன்று நூலாசிரியர் குறிப்பிட்டிருந்த குற்றங்களேயாகும் .*


THE ISLAND - Thursday 6th November, 2012

Impeachment of CJ: An effort to preserve arbitrary rule

Science and Technology Minister Pavithra Wanniarachchi and Deputy Housing Minister Lasantha Alagiyawanne handing over the impeachment motion against Chief Justice Dr. Shirani Bandaranayake, to Speaker Chamal Rajapaksa at the Speaker's official residence. UPFA MPs Arundika Fernando, Shantha Bandara and Mrs Sudarshini Fernandopulle look on. (Pic. Courtesy Speaker's Office)

dangerous one, is its 'pseudo-populist' nature. It is a farce. It is on that basis that the Opposition to the Supreme Court and its determination on the Divineguma Bill was mustered within Parliament and outside. This is the most dangerous trend.

Those who are blind to populist rhetoric and who cannot distinguish between what is in letter and what is intended, even the Supreme Court decision on the Divineguma bill might appear 'not correct' even though they may like to 'defend devolution' like a pet dog. They even might stumble when the real challenge comes in abolishing the 13th Amendment and the provincial council system. When that comes, in addition to populism, it would be 'patriotism' against foreign interference or imperialism. Even the 'moderate' left in Parliament cannot be completely relied on, on the issue of the 13th Amendment.

*நீதியரசர் ஸ்ரீபவனின் தன்னிச்சையான பிழையாய் வழிநடத்தப்பட்ட முடிவினை கொண்டே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் தொடர்ந்து வந்த தனது குறிப்பை எழுதியிருந்தார்கள், ஆனால் இலங்கை அரசியல் யாப்பின் 132 ம் சரத்தின் பிரகாரம் பிரதம நீதியரசரின் தனியான கருத்தே தேவைப்பட்டதேயல்லாமல் வேறு எவருடையதுமல்ல.*

*பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் 'நீதித்துறை பாரபட்சமுள்ளதும் தேர்ச்சியற்றதும்' என்கிற கருத்தினை நீதியரசர் ஸ்ரீபவன் 'அற்பமான' ஒன்று என கருதியமையை ஏற்று தனது குறிப்பை இட்டபோதும், அவர் குறித்து சிந்திக்கின்றபோது அதனை தானே கையாண்டவராக கருதப்படுவார்.*

*நீதியரசர் P.A. ரத்நாயக்க அவர்கள் 'நீதித்துறை பாரபட்சமுள்ளதும் தேர்ச்சியற்றதும்' என்கிற கருத்தினை நீதியரசர் ஸ்ரீபவன் அற்பமான ஒன்று என கருதியமையை ஏற்று தனது குறிப்பை இட்டபோதும், அவர் குறித்து சிந்திக்கின்றபோது அதனை தானே கையாண்டவராக கருதப்படுவார்.*

*நீதியரசர் சந்திரா ஏக்கநாயக்க அவர்கள் நீதித்துறை பாரபட்சமுள்ளதும் தேர்ச்சியற்றதும் என்கிற கருத்தினை நீதியரசர் ஸ்ரீபவன் அற்பமான ஒன்று என கருதியமையை ஏற்று தனது குறிப்பை இட்டபோதும், அவர் குறித்து சிந்திக்கின்றபோது அதனை தானே கையாண்டவராக கருதப்படுவார்.*

*முக்கியமாக நீதியரசர்* NG *அமரதுங்க அவர்கள் நூலாசிரியரின் சமர்ப்பணம் தொடர்பில் பிழையையோ மறுப்பையோ தெரிவிக்கவில்லை, விசேடமாக நீதியரசர்* NG *அமரதுங்க தலைமை தாங்கிய மூவரடங்கிய உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் குழாமின் முன்பதாக கொடுக்கப்பட்ட ' இங்கே கொடுக்கப்பட்டுள்ள நூலாசிரியரின் மனுவினை செவிமடுப்பதற்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படுகின்றது மாறாக அதனை முன்னெடுத்து செல்வதற்கல்ல' என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க கொடுத்த முன் வழிகாட்டல் தொடர்பிலான வாக்கு மூலங்கள் தொடர்பில் எந்தவொரு மறுப்பினையும் தெரிவிக்கவில்லை.*


CEYLON TODAY

Monday 29 October 2012 | www.ceylontoday.lk | Price : Rs 20.00 | Vol: 01/294

# CJ on the spot

**A group of MPs contemplating impeachment** | **Cite bribery case against CJ's husband as reason**

By Daya Perera and J.T. de Silva

A group of government Parliamentarians is preparing to move an impeachment motion against Chief Justice, Dr. Shirani Bandaranayake, in Parliament in the near future.

This situation has arisen subsequent to the Commission to Investigate Allegations of Bribery or Corruption (CIABOC) filing charges against Pradeep Kariyawasam, for purchasing shares of a loss-making company at a high rate, while serving as the Chairman of the National Savings Bank (NSB).

The aforesaid group is of the opinion that since the CJ is Kariyawasam's spouse, it is unethical for her to remain in her position.

The group claimed that if the CJ does not resign willingly, they will be forced to move an impeachment against her, in order to protect the independence of the judiciary.

See page 02

GOVT. SCARED OF CJ – NLS

By Amila Jayasinghe

The National Lawyers' Society (NLS) accused the government of attempting to bring an impeachment motion against Chief Justice (CJ), Dr. Shirani Bandaranayake.

President of the NLS, Upul Jayasuriya, alleged the government is scared because the CJ would not bow down to President Mahinda Rajapaksa.

See page 02

**[www.justification-for-supporting-the-impeachmepnt-of-chief-justice.com](www.justification-for-supporting-the-impeachmepnt-of-chief-justice.com)**




# 2012ம் ஆண்டு இலங்கை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற பிரேரணைக்கு ஆதரவளித்தமைக்கான நியாயங்கள்

*அரசியலமைப்பின் சரத்துக்கள் தொடர்பிலும் நடைமுறைகள் தொடர்பிலும் நவம்பர்* 2012 *மற்றும் ஜனவரி* 2013 *இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் நீக்கம் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பரந்தளவிலான பொது முரண்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்றன. இவ்வாறான முரண்பாடுகள் நீதித்துறை நடைமுறை தொடர்பிலான ஐ.நா.வின்*

பெங்களூர் கொள்கைகள் மற்றும் லட்டிமார் இல்ல கொள்கைகள் என்பவற்றையும் ஏனைய நாடுகளில் இடப்பெறும் நடைமுறைகளை ஒப்பிட்டு பார்த்தும் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்கள் கூட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் நான் பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு சத்திய கடதாசி ஒன்றை சமர்ப்பித்து , வெளிப்படையாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப்பத்திரிகையை ஆதரித்திருந்தேன், இதற்கான ஆதாரங்களும்,நியாயங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொது மேடைகளிலும் ஊடகங்களிலும் எனது இந்த நிலைப்பாட்டை நான் கூறியதுமன்றி சர்வதேச மட்டத்திலும் நிறுவனங்கள்,கூட்டமைப்புகள் மற்றும் முகவர்கள் முன்னிலையிலும் சமர்ப்பணங்களை மேற்கொண்டு எனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியிருந்தேன். என்னுடைய சமர்ப்பணங்களை சரியாக கையாளாமல் பிரித்தானியாவிற்க்கும் வெல்ஸிற்குமான சட்ட மனித உரிமைகள் குழுவின் சார்பில் ஜெப்ரி ரொபேர்ட்ஸன் QC ஐ.இரா. அவர்களினால் அவரது முரண்பாடுள்ள சகவாசத்தினை வெளிக்காட்டது கண்டனமாதும் நம்ப முடியாததும், மதிப்பற்றதுமான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது என நான் அறிந்து கொண்டேன்.








# நிஹால் ஸ்ரீ அமரசேகர , *F.C.A, F.C.M.A, Fellow C.M.A, C.G.M.A,C.F.E*

**உறுப்பினர், அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கம்**
**ஒருங்கமைப்பாளர்- சர்வதேச கூட்டமைப்பு ஊழல் மோசடி எதிர்ப்பு அதிகாரசபை**
**முன்னாள் சபை உறுப்பினர் - அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கான சர்வதேச கூட்டமைப்பு**

சிறிது காலம் வெளிநாட்டு பயணம் ஒன்றின் பின்னர் நாடு திரும்பிய வேளை, அரசாங்கமானது குறைவாக செயற்படும் நிறுவனங்கள் மற்றும் பாவனைக்குட்படுத்தப்படாத சொத்துக்களை மீளெழுச்சி செய்யும் சட்டமூலத்தை அவசரமான சட்டமூலமாக அறிமுகப்படுத்தியிருந்ததை அறிந்து கொண்டேன். பாராளுமன்றத்தில் 2011 நவம்பர் 8ம் திகதி சமர்பிக்கப்பட்டிருந்த இந்த சட்டமூலமானது, 2011 நவம்பர் 9ம் திகதி அங்கீகரிக்கப்பட்டு சபாநாயகரினால் 2011 நவம்பர் 11 கைச்சாத்திடப்பட்டிருந்த போதும், 22 நவம்பர் 2011 அன்றே அவரால் பாராளுமன்றத்திற்கு இது தொடர்பான அறிவித்தல் கொடுக்கப்பட்டது.( கூகுள் புத்தகங்கள் – – *‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’)*

*அரசியல் சாசனத்தின் 122வது சரத்தானது,தேசிய முக்கியத்துவம் கருதி ஒரு அவசர சட்டமூலமானது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டால், அதனை ஜனாதிபதி அவர்கள் அந்த சட்டமூலமானது அரசியலமைப்பிற்கு உட்பட்டதா என்பதற்கான உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்காக பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைக்க வேண்டும். உச்ச நீதிமன்றமானது விசேடமான தீர்ப்பொன்றை 24னான்கு மணிநேரத்திற்குள் அல்லது மூன்று நாட்களுக்குள் வழங்கவேண்டும்.*

*அமைச்சரவை செயலாளரினால் அக்டோபர் 19 2011 அன்று கைச்சாத்திடப்பட்ட குறித்த சட்டமூலமானது, வெள்ளிக்கிழமை 21 அக்டோபர் 2011 அன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவினால் பெறப்பட்டு,வாரவிடுமுறை நாட்களுக்குள் திகதி குறிக்கப்பட்டு அக்டோபர் 24, 2011 அன்று விசாரிப்புக்காக பட்டியலிடப்பட்டு, இது தொடர்பில் பாதிப்பிற்குள்ளாகும் எந்தவொரு குழுவிற்கும் அறிவித்தல் கொடுக்காமல், தனியே சட்டமா அதிபருக்கு மாத்திரம் அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அவர் உள்ளடங்கலாக நீதியரசர்கள் PA ரத்நாயக்க,மற்றும் C ஏக்கநாயக்க ஆகியோரினால் விசேஷித்த வண்ணமாக செவிமடுக்கப்பட்டு அக்டோபர் 24, 2011 அன்று விசேட தீர்ப்பளிக்கப்பட்டு பின்னர் இலங்கை பாராளுமன்றத்தில் நவம்பர் 9, 2011 அன்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. எனவே,பாதிக்கப்பட்ட எந்தவொரு குழுவினருக்கும் 24 அக்டோபர் 2011 உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி முறைப்பாடு செய்ய வாய்ப்புகளே இல்லாமல் இருந்தது. (அமேசன் புத்தகங்கள் – ‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’)*

*அரசியல் யாப்பின் 121 ம் சரத்தின் பிரகாரம், ஒரு சட்டமூலத்தை அரசியல் சாசன இசைவாக்கம் ஒரு வாரகாலத்திற்குள் குறித்து சவால் விடுவதற்கு உரிமை இருந்தபோதும், அவ்வுரிமையானது, அரசியல் யாப்பின் 122ம் சரத்தின் படி, அமைச்சரவை தேசிய நலன் என தீர்மானித்திருந்த ஜனாதிபதி இதனை அரசியல் சாசன இசைவாக்கம் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்காக பிரதம நீதியரசரிற்கு அனுப்பட்டிருந்த இந்த விசேட சட்டமூலமானது மறுக்கப்பட்டிருந்தது. ஆதாரம்*

*அவசர சட்டமூலங்கள் தொடர்பில் அரசியல் யாப்பு சட்டவரையறை தொடர்பான விசேட நடைமுறைகள்*

***122 (1) தேசிய நலன் கருதி அமைச்சரவையினால் சட்ட மூலமொன்று அனுமதியளிக்கப்பட்டு அமைச்சரவை செயலாளரின் கரங்களில் கிடைக்கப்பெறின்,***

- ***a)*** ***பந்தி 2டில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பில் சரத்து 78(1) மற்றும் 121 ஆகியன எவ்வித தாக்கத்தையும் கொண்டிருக்காது.***
- ***b)*** ***ஜனாதிபதி அவர்கள் குறித்த சட்டமூலத்தின் அரசியல் இசைவாக்கம் தொடர்பான விசேட தீர்ப்பொன்றினை வேண்டி பிரதம நீதியரசருக்கு எழுத்து மூலம் வேண்டுகிற அதேவேளை, குறித்த விண்ணபத்தின் பிரதி சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.***
- ***c)*** ***உச்ச நீதிமன்றமானது, குறித்த சட்டமூலம் தொடர்பில் 24ன்கு மணித்தியாலங்களுக்குள், ( ஜனாதிபதி குறிப்பிடும் பிரகாரம் மூன்று நாட்களை தாண்டாது) நீதிமன்றத்தினை கூட்டி ஒரு விசேட தீர்ப்பினை எடுத்து அதனை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்க வேண்டும்.***

***(2) சரத்து 121 ன் 2ம் பந்தியும் அவ்வாறே அமுல் செய்யப்படவேண்டும்.***

*எனவே ஒரு சட்டமூலம் தொடர்பில் அதன் அரசியல்சாசன இசைவாக்கம் தொடர்பிலான உச்ச நீதிமன்றத்திற்கு சந்தேகம் ஒன்று எழுகின்ற வேளை அத்தகைய சட்டமூலமானது அரசியல் யாப்பிற்கு முரணானது என்ற சட்ட பாதுகாப்பானது சாராது என 123 (3) ல் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதாரம்*

> *123 (3) சரத்து 122ல் குறிப்பிட்டுள்ளவாறு சட்டமூலமொன்று ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், உச்ச நீதிமன்றமானது சட்டமூலத்திலோ அல்லது ஒரு பகுதியிலோ அரசியல் யாப்பிற்கு முரணான அம்சங்கள் தொடர்பில் சந்தேகம் ஒன்றை எழுப்புகின்ற பட்சத்தில், குறித்த சட்டமூலமோ அதன் பகுதிகளோ அரசியல் சாசனத்திற்கு முரணானது என கருதப்படுவதோடு, உச்ச நீதிமன்றமானது இந்த சரத்தின் 1வது 2வது பந்திகளின் அடிப்படையில் செயற்படவும் வேண்டும்.*

*எனினும், மே 15 2015ல் உள்ளடக்கப்பட்ட அரசியலமைப்பின் 19வது திருத்ததின் 30 மற்றும் 31 வது சரத்துகள் அரசியலமைப்பின் 122 123 (3) ஆகியவற்றை நீக்கியதுடன், பாராளுமன்றமானது 122 சரத்திலுள்ள அவசர சட்டமூலங்கள் அரசியலமைப்பின் 123 (3) இனாலேயே நிர்வகிக்கப்பட்டன என்பதனை உறுதி செய்தது. ஆதாரம்*

***அரசியலமைப்பின் 122வது சரத்தின் நீக்கம் "30 அரசியலமைப்பின் 122வது சரத்து இத்தால் நீக்கப்படுகிறது"***

***அரசியலமைப்பின் 123 வது சரத்தின் திருத்தம் "31 அரசியலமைப்பின் 123 வது சரத்தானது அதன் (3) அம்சத்தை நீக்குவதன் மூலம் திருத்தப்படுகின்றது.***

*மேற்குறித்த 24 அக்டோபர் 2011 ன் விசேட தீர்ப்பின் போது, உச்ச நீதிமன்றம்.* ***எழுப்பிய கேள்விகளுக்கு பாதிக்கப்பட்ட வேறெந்த குழுவினரும் இல்லாதிருந்த இடத்தில் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் நாயகம் அவர்கள் ஒரு நட்புறவின் பேரில் பதிலளித்திருந்தார்*** *எனினும் குறித்த சட்டமூலமானது அரசியலமைப்பின் 123 (3)இருந்த பிரகாரம்.* ***அரசியல் சாசனத்திற்கு எதிரானதாக அரசியல் சாசனத்தினாலேயே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது*** *உச்ச நீதிமன்றமானது வேறு வகையில் தீர்ப்பினை வழங்குவதை அரசியல் யாப்பு தடுத்தும் நிறுத்தியும் இருந்தது (கூகுள் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'* )

*மேலும் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் தேசிய பாதுகாப்பு கருதியேயன்றி வேறெந்த வகையிலும் எதிரான சட்டங்கள் இயற்றப்படுவதை அரசியலமைப்பின் 157ம் சரத்து தடை செய்திருந்த போதும், 24 ஒக்டோபர் 2011ன் பொதுநலம் அடிப்படையான விசேட தீர்ப்பானது, அரசியல் சாசனத்தின் பிரகாரம் உச்ச நீதிமன்றம் செய்ய முடியாத ஒரு காரியமான* ***அரசியல் சாசனத்தை மீறும் ஓன்றாகவும், அரசியல் சாசனத்தை மாற்றி எழுதிய ஒன்றாகவும்*** *காணப்பட்டது.*

*முன்னொரு சந்தர்ப்பத்தில், பிரிவி கவுன்சிலினால், லினயகே மற்றும் ஏனையோர் எதிர் மகாராணி (1965) UKPC 1 இனால் தீவிர முரணானது என நிராகரிக்கப்பட்ட தனியார் சொத்து அபகரிப்பு சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் வசமாக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட 36 தனியார் நிறுவனங்களில் ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா (ஏற்கனவே குறித்த நிறுவனத்தின் மறுசீரமைப்பிற்கான சட்ட அங்கீகாரம் கிடைக்கப்பட்டிருந்தும்) வும் ஒரு நிறுவனமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த சந்தர்ப்பத்தில், குறித்த அவசர சட்டமூலமானது எந்தவொரு வெளிப்படையான ஆய்வு செய்யப்பட்ட நடைமுறையையும் தடை செய்ததுடன், மனித உரிமைகளை மீறியதினிமித்தமும், பாதிக்கப்பட்ட குழுவினருக்கு எந்தவொரு அறிவுறுத்தலும் கொடுக்கப்படாமையினாலும், அவர்களது இயற்கை நீதியை மீறிய ஒன்றாக காணப்பட்டது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்களும், ஏனைய இரண்டு நீதியரசர்களும், மேற்குறித்த விசேட தீர்ப்பினை 24 அக்டோபர் 2011 வழங்கிய போது இந்த விடயங்களை தொடர்பில் சீரான நடவடிக்கையை எடுப்பதற்கு தவறியிருந்தார்கள். (அமேசன் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'* )

*நான் HDL ன் ஊக்குவிப்பாளரும் பங்குதாரரும் என்ற வகையில், குறித்த சட்டமூலமானது சபாநாயகரினால் நவம்பர் 11, 2011 அன்று அங்கீகரிக்கப்பட்டதை அறியாமல், நவம்பர் 14, 2011 அன்று உச்ச நீதிமன்றத்தில் SC (FR) 534/2011, அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததோடு, உச்ச நீதிமன்றமானது*

*அரசியலமைப்பின் 4வது சரத்தின் பிரகாரம், அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவற்றை குறுக்கீடு செய்யாமல் அந்த உரிமைகளை மறுக்காமலும் இருப்பதற்கு கடைமைப்பட்டிருந்தது. (கூகுள் புத்தகங்கள் - ‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’* )

> *“இறைமையை பிரயோகித்தல்*
>
> *4. மக்களின் இறைமை பின்வருமாறு பிரயோகிக்கப்படவும்,அனுபவிக்கப்படவும் வேண்டும்.*
>
> *அரசியலமைப்பினால் வெளிப்படுத்தபட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள்,அரசாங்கத்தின் எல்லா உறுப்புகளாலும் பேணப்படவும்,போற்றப்படவும்,ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதோடு,அவை இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முறையிற்றவிரவும்,அத்தகைய அளவிற்கு தவிரவும்,சுருக்கப்படுதலோ,மட்டுப்படுத்தப்படுதலோ மறுக்கப்படுதலோ ஆகாது: அத்துடன்,”*

*நான் சுகவீனம் அடைந்ததன் நிமித்தம்,என்னுடைய விண்ணப்பத்தோடு,மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பித்து இரண்டு வாரங்களுக்குள் ஆஜராகுவதற்கு தவணை வேண்டி நின்றேன். இந்த சட்டமூலத்தை எதிர்த்து இன்னும் ஐந்து பேர் முன்னரே வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய உச்ச நீதிமன்றத்தின் குழுவினால் நவம்பர் 25, 2011, அன்று விசாரணைக்கு எடுப்பதற்காக பட்டியலிடப்பட்டிருந்தது. என்னுடைய மருத்துவ சான்றிதழை புறந்தள்ளிய அவர் எனது விண்ணப்பத்தை நவம்பர் 15, 2011 இற்கு மறுதினமே கேட்பதற்காக பட்டியலிட்டிருந்தார். விசேடமாக உச்ச நீதிமன்றத்தின் பதிவாளர் பிரத்தியேகமாக எனக்கு அழைப்பினை ஏற்படுத்தி நீதிமன்றத்தில் சமூகமளிக்குமாறு கேட்டிருந்தார்.அதனை நான் மறுத்திருந்தேன். (அமேசன் புத்தகங்கள் - ‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’* )

*என்னுடைய கோரிக்கையின் பேரில் உச்ச நீதிமன்றத்தின் பதிவாளர் ஏனைய ஐந்து பேரினதும் வழக்கினை செவிமடுத்த ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற குழாமிற்கு என்னுடைய மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்திருந்தார். தலைமை தாங்கிய நீதியரசர் அவர்கள் எனக்கு வேறொரு தினத்தில் விண்ணப்பத்தை முன்வைக்கும்படிக்கு அனுமதித்த அதேவேளை, குறித்த சட்டமூலமானது நவம்பர் 11, 2011 அன்று சபாநாயகரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், நவம்பர் 15, 2011 அன்று அவரால் அது குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தமையை காரணங்கட்டி ஏனைய ஐவரது விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்தது. அரசியலமைப்பின் 80(3) சரத்திற்கமைய சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு சட்டமூலத்திற்குமெதிரான சவாலை ஏற்றுக்கொள்ளாத அலுவலகமாக உச்ச நீதிமன்றம் இயங்கியது. ஆதாரம்*

| | |
|---|---|
| *சட்டமூலம் அங்கீகரிக்கப்படுகின்றபோது* | 80 (3) *சட்டமூலமானது ஜனாதிபதியினாலோ அல்லது சபாநாயகரினாலோ அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு நீதிமன்றோ அதிகாரமோ எந்தவொரு அடிப்படையிலும் அது குறித்து கேள்வி எழுப்பவோ விசாரணை செய்யவோ முடியாது.* |

*குறித்த சட்டமூலத்திற்கு சபாநாயகர் அங்கீகாரம் வழங்கியதை அறியாமல், நான் நவம்பர் 17, 2011 அன்று அரசியலமைப்பின் 121 வது சரத்திற்கமைய SC (SD) 2/2011, எனும் இலக்கத்தை கொண்ட இந்த சட்டமூலத்திற்கு எதிரான விண்ணப்பம் ஒன்றினை தாக்கல் செய்தேன். அந்த விண்ணப்பத்தினை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள், "எவராவது இதில் இடையிட விரும்பியிருந்தால் அவர்கள் இந்த சட்டமூலமானது உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இடையிட்டிருக்க வேண்டும்" என்ற ஒரு குறிப்பினை முன்வைத்து தள்ளுபடி செய்திருந்தார். இந்த தள்ளுபடியானது அப்படியான ஒரு இடையீட்டை செய்வதற்கான அவகாசம் இருக்கவில்லை என்பதனை அவர் நன்கறிந்திருந்தார் என்பதற்கும் முரணானதாக அமைந்தது. (கூகுள் புத்தகங்கள் - ‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’* )


Nihal Sri takes on 'Expropriation Bill'

Petition filed by Nihal Sri Amarasekera, against the 'Revival of Underperforming Enterprises and Underutilised Assets Bill'

Nihal Sri files application before SC to re-examine Expropriation Bill

SC orders notices to be issued in Expropriation Bill petition

Nihal's FR Application on the Expropriation Law

FR application against Expropriation Act

Supreme Court issues notice on respondents

Supreme Court determination on 'Expropriation Bill'

Pleadings in Nihal Sri Ameresekere's FR application

Breakthrough in Nihal's FR application on 'Expropriation Bill'

Nihal's Fundamental Rights application on Expropriation Law fixed for 26 Jan.

Pleadings in Nihal Sri Ameresekere's FR application

SC declines to re-visit constitutionality of Revival Bill in FR petition by Nihal

Prayer in Nihal Sri Ameresekere's FR Petition

On the Revival of Underperforming Enterprises and Underutilized Assets Act

Pleadings in Nihal Sri Ameresekere's FR application

*எவ்வாறாயினும், என்னுடைய அடிப்படை உரிமை மீறல் வழக்கினை மேற்குறித்த ஐவரடங்கிய நீதிபதிகள் குழுவின் மூவரின் முன்னிலையில், நீதியரசர் NG அமரதுங்க தலைமையில் விசாரிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆரம்பத்திலேயே நான் இந்த வழக்கை நவம்பர் 14, 2011 அன்று தாக்கல் செய்தபோது இந்த சட்டமூலமானது சட்டமாக அங்கீகரிக்கப்பட்டமையை அறிந்திருக்கவில்லை என்பதனையும், 22,நவம்பர் 2011 அன்று சபாநாயகரினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னரே இது குறித்து அறிந்து கொண்டேன் எனவும் தெரிவித்ததோடு, இந்த சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு எனக்கு அவகாசம் இருக்கவில்லை என்ற அடிப்படையிலும், என்னுடைய சமர்ப்பணம் அரசியல் யாப்பின் 80 (3) இந்த படி தள்ளுபடி செய்யப்படலாகாத ஒன்று என்ற அடிப்படையிலும் 24 அக்டோபர் 2011 வழங்கப்பட்ட விசேட தீர்ப்பில் திருத்தம் வேண்டும் எனவும் நான் வேண்டி நின்றேன். (அமேசன் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law' )*

*உச்ச நீதிமன்றமானது 24 அக்டோபர் 2011 வழங்கிய தனது விசேட தீர்ப்பினை ஆராய்ந்து திருத்துவதற்கான பூர்வாங்க உரிமையை கொண்டுள்ளது என நான் தெரிவித்ததோடு, அரசியல் யாப்பின் 123 (3) ல் உள்ள கட்டாயமான உள்ளடக்கத்தின் பிரகாரம் தீர்ப்பில் திருத்தத்தினை மேற்கொள்ளுகின்ற போது, அது தொடர்பிலான மேலதிகமான நடவடிக்கை தொடர்பில் பாராளுமன்றமும் சபாநாயகருமே தீர்மானிக்கவேண்டும் எனவும் தெரிவித்தேன். ஏற்கனவே நவம்பர் 15, 2011 அன்று ஏனைய ஐந்து விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்திருந்த தலைமை நீதிபதி NG அமரதுங்க அவர்கள் என்னுடைய விண்ணப்பத்தில் கூறப்பட்டிருந்த வாதங்களை ஏற்றுக்கொண்டு, பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கொடுக்குமாறு பணித்ததுடன், என்னை திருத்தியமைத்த விண்ணப்பம் ஒன்றினை டிசம்பர் 16 2011இற்கு முன்னர் தாக்கல் செய்யும்படியும் வேண்டினார், அதனை நான் நிறைவு செய்திருந்தேன். பதிவாளர் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு 26 ஜனவரி 2012 ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பினார். (கூகுள் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law')*

*அக்டோபர் 24, 2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பில் திருத்தத்தினை நான் வலியுறுத்தியமையினால், சட்டபூர்வமாகவும் சரியான விதத்திலும் ஜனவரி 18,2012 அன்று அரசியல் யாப்பின் 132ம் சரத்தின் பிரகாரம் பிரதம நீதியரசரை குறித்த தீர்ப்பின் மீளாய்விற்காக ஒரு நீதிபதிகள் குழுவையும் இன்னுமொரு ஐவர் அல்லது அதிகமானோர் அடங்கிய ஒரு நீதிபதிகள் குழுவையும் அமைக்கும்படி விண்ணப்பம் ஒன்றினை முன் வைத்தேன். ஆதாரம்*

*"உச்ச நீதிமன்ற அமர்வுகள்*

*132,*

1. *உயர் நீதிமன்றத்தின் பல்வேறு நியாயாதிக்கங்கள் பிரதம நீதியரசர் வேறுவிதமாக பணித்தாலேயொழிய,சாதாரணமாக கொழும்பிலேயே பிரயோகிக்கப்படல் வேண்டும்.*
2. *உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் உயர் நீதிமன்றின் பல்வேறு நீதிபதிகளும்,வெவ்வேறாக அமர்வதன் மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம்.*
3. *பிரதம நீதியரசர்*
   - I. *அவரது சொந்த பிரேரணையில் அல்லது,*
   - II. *ஏதேனும் கருமத்தை விசாரணை செய்கின்ற இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நீதிபதிகளின் வேண்டுதலின்பேரில் அல்லது*
   - III. *சம்பந்தப்பட்ட பிரச்சினை பிரதம நீதியரசரின் அபிப்பிராயத்தில்,பொது முக்கியத்துவமும்,பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்குமெனின் ஏதேனும் மேன்முறையீட்டுக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்திற்கு கட்சிக்காரராயுள்ள ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில்,*

4. தீர்ப்பு ஏக மனதான முடிவாக இல்லாதபோது பெரும்பான்மையினரின் முடிவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாதல் வேண்டும்.”

எவ்வாறாயினும், 24 அக்டோபர் 2011 அன்று அவர் தலைமையில் விசேட தீர்ப்பினை வழங்கிய இலங்கையில் சம்பிரதாயமாயிருந்த அதே நீதிபதிகள் குழாமை நியமிக்காமல், முரண்பாடான வகையில், நவம்பர் 25, 2011 அன்று எனது விண்ணப்பத்தை ஏற்று பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பிய நீதியரசர் NG அமரதுங்க தலைமையிலான நீதிபதிகள் குழாமை பெப்ரவரி 9, 2012 அன்று இந்த மனுவை விசாரிக்கும்படிக்கு நியமித்தார். (அமேசன் புத்தகங்கள் – *‘‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’*)

நான் பெப்ரவரி 9,2012 அன்று ஏறத்தாள 1 1/2, மணித்தியாலங்கள் வரை நீண்ட எழுத்து மூல சமர்ப்பணத்தை செய்து, போதிய ஆதாரங்களுடன் குறித்த அவசர சட்டமூலத்தின் மீதான விசேட தீர்ப்பானது,, இலங்கை அரசியல் யாப்பிற்கு முரணாக உச்ச நீதிமன்றமானது குறித்த சட்டமூலமானது இலங்கை யாப்பிற்கு முரணானதல்ல என தீர்ப்பளித்தமையானது, இலங்கை அரசியல் யாப்பின் 123(3) சரத்தின் பிரகாரம், ஒரு அவசர சட்டமூலம் தொடர்பிலான சந்தேகத்திற்கு முரணாக இலங்கை அரசியல் யாப்பிற்கு எதிராக அமைந்ததோடு உச்ச நீதிமன்றமானது தனது கடைமையைச் செய்யத் தவறியும் இருந்தமையை எடுத்துக் காட்டியிருந்தேன். எனது வாதங்களிலே நான் சிலி நாட்டின் ஜனாதிபதி மீதான கர்த்தாக்களின் சபையின் வழக்கிலே, எவ்வாறு ஒரு கர்த்தாக்களின் குழுவின் தீர்ப்பினை இன்னுமொரு கர்த்தாக்களின் குழுவானது, இடைப்பட்ட குழுவான சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனத்தில் அவரது மனைவி ஒரு நிருவாக பொறுப்பில் பணிக்கமர்த்தப்பட்டிருந்தமையை சுட்டிக்காட்டி புறந்தள்ளியது என்பதனையும் எடுத்துக் காட்டியிருந்தேன். (கூகுள் புத்தகங்கள் - *‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’*)

வெளிப்படையாகவே எனது சமர்ப்பணத்தில் இருந்த நேர்மையையும்,பிழையற்ற நிலையையும் கண்ட தலைமை நீதிபதி NG அமரதுங்க அவர்கள், பிரித்தானியாவிலே ஒரு குழுவின் முடிவினை இன்னொரு குழு மீளாய்வு செய்திருந்தாலும், இலங்கையில் அதே குழுவே குறித்த ஒரு தீர்ப்பினை மீளாய்வு செய்வது வழக்கமாகும் என சுட்டி காட்டினார். நான் உடனடியாகவே, அரசியல் யாப்பின் 132ம் சரத்திற்கமைய குறித்த 24 அக்டோபர் 2011 வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செய்வதனை வேண்டி பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு நான் ஜனவரி 18, 2012ல் சமர்ப்பித்திருந்த விண்ணப்பம் தொடர்பில் ஒரே நீதியரசர் NG அமரதுங்க தலைமையிலான குழுவை இந்த வழக்கை கேட்பதற்கு நியமித்தார் என்பதனை அறிந்திருந்த போதிலும், அது குறித்து எடுத்தியம்பினேன். (அமேசன் புத்தகங்கள்- – *‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’*)

ஜனவரி 18, 2012ல் சமர்ப்பித்திருந்த விண்ணப்பம் தொடர்பான தரவுகளை தேடிப்பார்த்ததன் பின்னர், தலைமை நீதியரசர் NG அமரதுங்க அவர்களும் ஏனைய நீதிபதிகளும் என்னையும் அங்கிருந்த ஏனையோரையும் திகிலூட்டும் வகையில், அறிந்தோ அறியாமலோ குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், இவ்வழக்கை செவிமடுக்க மாத்திரமே தம்மை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணித்திருப்பதாகவும் இந்த வழக்கை முன்னெடுத்து செல்வதற்கு அனுமதி கொடுக்கவில்லை என உளறினார்கள். (ரவி கருணாநாயக்க, அப்போதய எதிர்கட்சி உறுப்பினரும், தற்போதைய நிதியமைச்சரும் அன்று பிரசன்னமாகி இருந்தவர் நடந்தவை குறித்து சான்று பகருவார்.) வழக்கை முன்னெடுத்து செல்வதற்கு அனுமதி கொடுப்பது இல்லை என முன்னரே தெரிந்திருந்தால், என்னை ஏன் உச்ச நீதிமன்றத்தின் பெறுமதியான நேரத்தை வீணடிக்கும்படியான அவ்வளவு நீண்ட கடினமான சமர்ப்பணங்களை உச்ச நீதிமன்றத்திற்கு முன்னாள் செய்யும்படிக்கு கேட்டார்கள் என்னும் கேள்வி எழுகின்றது, எவ்வாறெனினும், ஒரு குழுவினுடைய வழக்கினை உச்ச நீதிமன்றத்தின் இன்னுமொரு நீதிபதி குழாமிற்கு முன் வழிகாட்டல் செய்வதற்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எவ்வித உரிமையும் இல்லை, அவருடைய சார்பில் இதுவொரு பாராதூரமான நியாயாதிக மீறல் அல்லவா? (கூகுள் புத்தகங்கள் - *‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’*)

அத்தகைய முரண்பாடான மிரட்டலை தொடர்ந்து NG அமரதுங்க தலைமை தாங்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பக்கசார்பினை எடுத்துக்காட்டும் உச்ச நீதிமன்றத்தின் அறிக்கைகளை சுட்டிக்காட்டி எழுத்துமூல சமர்பணத்தை மேற்கொண்டேன், இதற்க்கு ஆதாரமாக, ஜூலை 7, 2009ல் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் திருத்தப்பட்ட PB ஜெயசுந்தரவின் மீண்டும் தன்னை திறைசேரி செயலாளராக நியமிக்க கோரும் மனுவை மேற்கோள் காட்டியிருந்தேன், ஜோன் கீல்ஸ் இற்கு தனியார் மயமாக்கல் தொடர்பில் அவரது நடவடிக்கைகள் சட்ட முரணானதும்,பிழையையானதும் எனக்கண்டு அதனை செல்லுபடியற்றதாக ஜூலை 21, 2008ல் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற வழக்கு 209/2007 ல், தான் இனிமேல் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு அரச பதவியையும் வகிக்கமாட்டேன் எனவும்,தன்னை இப்பதவியிலிருந்து விலக்கும்படியும் சத்திய கடதாசி மூலம் உச்ச நீதிமன்றத்தை அவர் கேட்டிருந்தார், என்பதனையும் சுட்டிக் காட்டியிருந்தேன். (அமேசன் புத்தகங்கள்- *‘IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court’* )

*மேற்குறித்த PB ஜயசுந்தரவின் மனுவினை பிரதம நீதியரசர் தலைமையில், நீதியரசர்களான ஷிராணி பண்டாரநாயக்க, ஷிராணி திலகவர்தன, DJ டி S பலபத்தபெண்டி, S மர்சூப், K .ஸ்ரீபவன், மற்றும் PA ரத்நாயக்க ஆகியோர் கொண்ட எழுவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் விசாரணை செய்தது. எவ்வாறெனினும், மிகவும் சிரேஷ்ட நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் குறித்த வழக்கில் உறுதியான வகிபாகம் வகித்தார்கள்.*

*உச்ச நீதிமன்ற அறிக்கைகளின் பிரகாரம் தன்னால் உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சத்திய கடதாசியின்படி தன்னை அரச சேவைகளில் இருந்து விலக்கும்படி அவர் கேட்டதனையடுத்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை மாற்றக் கோரி PB ஜயசுந்தர அவர்கள் தாக்கல் செய்திருந்த விண்ணப்பங்கள் முறையே (a) (b) ஆகியவற்றினை நிராகரிக்கும்படியான ஏகமனதான முடிவு எடுக்கப்பட்டிருந்த போது, நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் ஆங்கில மொழிக்கு புதிய அர்த்தம் கொடுத்து, எப்படியாவது பின்னர் செய்யப்பட்ட (c) விண்ணப்பத்தில் உள்ளவாறு அந்த மற்றும் வேறு சலுகைகள் கொடுக்கப்படவேண்டும் என தெரிவித்திருந்தார், இதற்க்கு முரணான நிலைப்பாட்டை நீதியரசர் ஷிராணி திலகவர்தன கொண்டிருந்தார். முதன்மையான சலுகை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அதற்கு பிரதியீடாக துணையான அல்லது நிரப்பும்படிக்கான வேறு சலுகைகளை கொடுப்பதானது, குறித்த முதன்மை சலுகை விண்ணப்பத்தினை மறைமுகமாக ஆதரிக்கும் ஒன்றாக இருக்குமல்லவா? என்ற கேள்வி எழும்புகிறது. (கூகுள் புத்தகங்கள் - ['IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court'](#)*)

*PB ஜயசுந்தர உள்ளிட்டோர் கையாண்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தனியார்மயமாக்கலினை உச்ச நீதிமன்ற வழக்கு (FR) 158/2007 ல் உச்ச நீதிமன்றமானது ஜூன் 4, 2009ல் நீதிக்கு புறம்பானது என தீர்ப்பளித்து செல்லுபடியற்றதாக செய்து மீண்டும் இலங்கை காப்புறுதியை அரச உடைமையாக செய்த போது, சரியான தொழில்முறையாளர்களை அதனது இயக்குனர் சபைக்கு நியமிக்குமாறு பணித்திருந்தது. இதனை தொடர்ந்து சந்தைப்படுத்தலில் டிப்ளோமா வை கொண்டிருந்ததாக கருதப்படும் பிரதம நீதியரசரின் கணவரான பிரதீப் காரியவசம் அவர்கள் உட்பட ஏனையோர் ஜூன் 26, 2009லே நீதியரசர் NG அமரதுங்க தலைமையில் நீதியரசர்கள் K .ஸ்ரீபவன், மற்றும் PA ரத்நாயக்க ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழுவினால் இயக்குனர்களாக நியமிக்கப்பட்டார்கள். (அமேசன் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 4: Sri Lanka Insurance Privatisation - Annulled as Unlawful & Illegal by Supreme Court'*)

*இதனை தொடர்ந்து 2009 ஜூலையில் PB ஜயசுந்தரவின் தன்னை மீள திறைசேரியின் செயலாளராக நியமிக்க உச்ச நீதிமன்றத்தினை கோரும் விண்ணப்பமும் அதற்கொத்த சம்பவமாக பிரதம நீதியரசரின் கணவர் அரசியல் பலமிக்க பதவிகளான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் இயக்குனரும் தலைவருமாகவும், லங்கா வைத்தியசாலையின் இயக்குனராகவும் பொறுப்பேற்றிருந்தார். இதனைத் தொடர்ந்து மே 2010ல் அரச வங்கியான தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகவும் பதவியேற்றார். இந்தப் பின்னணியில் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் வெளிப்படையாகவே "நியாயாதிக பாகுபாடு கண்ணோட்டத்தில்" தகுதியற்று இருந்தார் அல்லவா? ஏனெனில் இதற்க்கு பின்னர் 24, செப்டம்பர் 2009ல் PB ஜயசுந்தரவின் மனுவை விசாரித்தும் மற்றும் முரண்பாடான விசேட தீர்ப்பினை 24, அக்டோபர் 2011ல் வழங்கியமையும், விசேடமாக அரசாங்கத்திற்கெதிராக செய்யப்பட்ட வேறெந்த வழக்கையும் விசாரிக்காமல் நடந்தும் கொண்டார். ஆகாரம் கர்த்தாக்களின் சபை - சிலி ஜனாதிபதி பினாகாட். (கூகுள் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 4: Sri Lanka Insurance Privatisation - Annulled as Unlawful & Illegal by Supreme Court'*)

*இலங்கை காப்புறுதியின் தலைவர், திறைசேரியின் செயலாளரின் கீழ் பணியமர்வதன் நிமித்தம் 24, செப்டம்பர் 2009ல் தன்னை மீளவும் திறைசேரியின் செயலாளராக பணியமர்த்த PB ஜயசுந்தர அவர்கள் தாக்கல் செய்த மனுவினை விசாரிப்பதிலிருந்து நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் விலகியிருந்திருக்க வேண்டும். நான் உச்ச நீதிமன்றத்தில் பெப்ரவரி 9, 2012ல் சமர்பித்திருந்த SC (FR) விண்ணப்ப இல 534/2011 குறிப்பிட்டிருந்தவாறு, இது சிலி ஜனாதிபதி எதிர் கர்த்தாக்கள் சபை வழக்கோடு ஒப்பிடும்போது பாரிய மோசமான குற்றமாகும்.*

*எனது மேலதிக எழுத்துமூல சமர்ப்பணத்தில், மேற்குறித்த எழுவரடங்கிய நீதிபதிகள் குழாமின் அங்கத்தவரான நீதியரசர் ஷிராணி திலகவர்தன அவர்களின் வேறுபட்ட தீர்ப்பினையும் மேற்கோள் காட்டியிருந்தேன். . (அமேசன் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court'*)

> *"8வது பிரதிவாதியான மனுதாரரினால் (PB ஜயசுந்தர) தாக்கல் செய்யப்பட்டு அவரினால் 21 ஜூலை 2009 மற்றும் 31 ஜூலை 2009 ஆகிய தினங்களில் திருத்தப்பட்ட மனுவானது உச்ச நீதிமன்றத்தின் எழுவரடங்கிய குழு முன்னிலையில் பட்டியலிடப்பட்டிருந்தது......."*
>
> *"நீதிமன்றானது......31 ஜூலை 2009ல் திருத்தப்பட்ட மனுவில் இருந்த விண்ணப்பங்கள் (a) மற்றும் (b) ஆகிய பந்திகள் மீதான சலுகைகளை நிராகரித்தது. எவ்வாறெனினும் திருத்தப்பட்ட மனுவின் (c) பகுதியில் காணப்பட்ட விண்ணப்பங்களில் வேறு சலுகைகளை வழங்க நீதிமன்றம் சார்பாக இருந்தது ."*

*"மனுதாரரான (PB ஜயசுந்தர) நீதிமன்றத்தின் அனுமதியின்றி 21 ஜூலை 2009 குறித்த மனுவினை திருத்தியிருந்தார்.மேலும் விசேஷமாக திருத்தங்களோடான சத்திய கடதாசி சமாதான நீதவான்/ஆணையாளரின் கையொப்பம் இல்லாமல் இருந்தமையானது அதனது உள்ளடக்கங்கள் சட்டத்தின் முன் செல்லுபடியற்றதாக கருதப்படும்.21ஜூலை 2009ல் திருத்தப்பட்ட மனுவானது செல்லுபடியான சத்தியகடதாசி ஒன்றினால் உறுதிப்படுத்தப்படாமல் இருந்தமையினால் அது மேலதிக விளக்கமின்றி நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும்."*

*"இந்த விடயமானது ஆகஸ்ட் 3, 2009ல் எடுக்கப்பட்ட போது, இரண்டாவது 31 ஜூலை 2009 திகதியிடப்பட்ட திருத்தப்பட்ட மனுவும் 31ஜூலை 2009ல் சத்தியக்கடதாசியும் நீதிமன்றத்தின் அனுமதியின்றி திருத்தப்பட்டிருந்தது."*

*மேற்குறித்ததை கண்டித்திருந்த நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள், என்னுடைய பொதுநல வழக்கான SC (FR) இல 481/2009 இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எண்ணெய் ஹெட்ஜிங் வழக்கிலே நவம்பர் 19 2009 அன்று இதற்கு முரண்பாடான முறையில், உச்ச நீதிமன்றத்தின் விதிகளின் பிரகாரம் மனுவில் திருத்தங்கள் செய்யும்படிக்கான உச்ச நீதிமன்றத்தின் அனுமதியை வேண்டி ஒரு மனுவைத் தாக்கல் செய்யும்படிக்கு என்னை பணித்தார்கள். (கூகுள் புத்தகங்கள் - 'Derivative / Hedging Deals by Citibank, Standard Chartered Bank, Deutsche Bank, with Sri Lanka Government's Petroleum Corporation - Dubious & Illegal ?'* )

*மேலதிகமாக உச்ச நீதிமன்ற விதிமுறைகள் 30 (1) ஆனது, முன்னரே எழுத்துமூல சமர்ப்பணத்தை செய்யாத எவருடைய விண்ணப்பத்தையோ மனுவையோ செவிமடுப்பதற்கு இடமளிக்க கூடாது எனவும் கூறுகின்றது.*

*உச்ச நீதிமன்றத்தின் விதிமுறைகள்* 1990
*இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது*
(*தனிச்சிறப்புடைய* )
இல.665/32 - வெள்ளிக்கிழமை, ஜூன் 07,1991

*பாகம் II*

*முறையீடுகள் மற்றும் விண்ணப்பம் தொடர்பான பொது ஏற்பாடு*

*30 (1) இந்த விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னதாகவே தனது எழுத்துமூல சமர்ப்பணத்தின் (இத்தால் சமர்ப்பணம் என அழைக்கப்படும்) 5 பிரதிகளை கையளித்திருக்காத எவரினதும் விண்ணப்பங்களை ஆதரிக்க முடியாது.*

PB *ஜயசுந்தரவின் விண்ணப்பம்* SC (FR) 209/2007 *மீதான விசாரணைகளில் நான் தனிப்பட்ட முறையில் செப்டம்பர்* 24, 2009 *ஆஜராகியிருந்த வேளை நான் மாத்திரமே எழுத்து மூல சமர்ப்பணங்களை கொடுத்திருந்தேன்,* PB *ஜெயசுந்தரவின் சட்டத்தரணி அவர்களுக்கு தனது சமர்ப்பணங்களை செய்வதற்கு போதிய நேரத்தினையும், உண்மையான மனுதாரரின் சட்டத்தரணிக்கும் போதிய நேரத்தினையும் முழு நாளும் இந்த மனுவை மாத்திரம் விசாரிக்க அமர்ந்திருந்த எழுவரடங்கிய நீதிபதிகள் குழு இடமளித்திருந்தது. மேற்குறித்த உச்ச நீதிமன்றத்தின் விதிமுறைகளுக்கமைய சமர்ப்பணத்தினை செய்வதற்கு தகுதியுடைய ஒரே நபரான எனக்கு முரண்பாடான வகையில், பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையில் நீதியரசர்* DJ *டி* S *பாலபதபென்தி ஆகியோர் வெறும்* 10 *நிமிடங்களே வழங்கியமையானது எனது சமர்ப்பணங்களை முன் வைப்பதிலிருந்து விலக்கியிருந்தமையை காட்டியது. (அமேசன் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court'*)

*இதற்கு முரண்பாடாக பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, தன்னை வரவேற்கும் உச்ச நீதிமன்றத்தின் சம்பிரதாய அமர்வின்போதான பல்வேறு விடயங்கள் அடங்கிய தனது உரையில் பின்வருமாறு கூறினார், " பௌத்த தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உங்களது கவனத்தை செலுத்த விரும்புகிறேன்- ' போதிய அக்கறையில்லாமல் வழக்குகளை துரித கதியில் விசாரிக்கும் ஒருவன் ஒரு நீதிபதி அல்ல. புத்திசாலியான ஒரு நீதிபதி தீர விசாரித்து பட்சபாதமின்றி தீர்ப்பு வழங்குவான்' (Daily News July 12,2009).*

*பிரதம நீதியரசர் அசோக டி சில்வா புதிய நீதிமன்ற கட்டிட தொகுதி ஒன்றினை மூதூரில் திறந்து வைத்தபோது பின்வருமாறு கூறினார், "ஒரு உன்னதமான தொழிலில் ஈடுபட்டுள்ள நாம் சட்ட ஒழுங்கை பேணுவதிலும்,நீதியை நிர்வகிப்பதிலும் பொறுப்புள்ளவர்களாக இருப்பதோடு, எவ்வித ஊழல் மோசடிகளையோ,பக்கச்சார்பினையோ இடம்பெறுவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கலாகாது" (Daily News July 10,2010).*

நான் தனிப்பட்ட முறையில் பிரதிவாதி என்ற வகையில் ஆஜராகி நீண்ட சமர்ப்பணங்களை செய்திருந்த வழக்கு SC (FR) விண்ணப்பம் 209/2007 இன் முரண்பாடான தனியார்மயமாக்கல் வழக்கின் ஜூலை 21, 2008ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் PB ஜயசுந்தர அவர்களை வன்மையாக கண்டித்திருந்ததோடு, அதனை தொடர்ந்து அவரது அரச பதவியிலிருந்து அவரை நீக்கவும் நிர்பந்தித்திருந்தது (கூகுள் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court')

அப்போதய பிரதம நீதியரசர் JAN டி சில்வாவின் மகளை திருமணம் செய்திருந்த நீதியரசர் DJ டி S பலபதபெந்தி அவர்களின் மகன் ஹாஜீகிலுள்ள இலங்கை தூதரகத்தின் இரண்டாம் செயலாளராக அரசியல் நியமனம் ஒன்றினை ஏற்றுக்கொண்டார், இதானால், இந்த இரண்டு நீதியரசர்களும், செப்டம்பர் 24, 2009ல் PB ஜயசுந்தரவின் குறித்த வழக்கினை விசாரித்ததன் நிமித்தம் "நியாயாதிக பாகுபாடு கண்ணோட்டத்தில்" தகுதியற்றவர்களாக காணப்படுவார்கள் அல்லவா? ஆகாரம் கர்த்தாக்களின் சபை - சிலி ஜனாதிபதி பினாகாட்.

முரண்பாடாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவரது பணிநீக்கத்திற்கு பிற்பாடு, மே 11 2013 அன்று ஊழல் மோசடிகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் இயக்குனர் நாயகம் அவர்களுக்கு எழுதிய ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட கடிதத்தில், மேற்குறித்த இருவருக்குமிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டியதோடு, பிரதம நீதியரசர் JAN டி சில்வா மற்றும் நீதியரசர் DJ டி S பலபதபெந்தி ஆகியோரது பாரபட்ச நடத்தை தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார். (Colombo Telegraph – *Full Text: Letter By Chief Justice Shirani Bandaranayake To DG Bribery Commission

செப்டம்பர் 24, 2009 மீதான முடிவின் மீதான வழக்கில் அக்டோபர் 13, 2009ல் உச்ச நீதிமன்றத்தின் எழுவர் அடங்கிய நீதிபதிகள் குழாமின் அறுவரின் 5 தீர்ப்புகளில் (ஒன்று கூட்டான) மேலும் விளங்கப்படுத்த முடியாத தோல்வியின் இன்னுமொரு அங்கமாக, எழுவரடங்கிய நீதிபதிகள் குழாமின் ஒருவரான ஷிராணி திலகவர்தவின் மாறுபாடான தீர்ப்பினை உச்ச நீதிமன்றமானது பிரித்தெடுத்திருந்தது, அதிலே புதிய பக்கம் ஒன்றினை உருவாக்கி எழுத்துருவினை பெரிதாக்கி தீர்ப்பின் மிக முக்கியமான இரண்டு பக்கங்களை நீக்கியிருந்தது, உண்மையான சிறிய எழுத்துருவுடன் முற்று பெறாத பந்தியுடன் ஆரம்பித்த பக்கத்திலே ஷிராணி திலகவர்தனவின் கையொப்பம் இருந்ததுடன் அதனை தொடர்ந்து வந்த இட்டுக்கட்டப்பட்ட பக்கமானது நிறைவுபெற்ற பந்தியுடன் ஆரம்பித்திருந்தும் இருந்தது, இது மிக தெளிவாக வேண்டுமென்றே ஒரு குளறுபடி இடம்பெற்றுள்ளதை காட்டியதுடன், இது தொடர்பில் நான் கண்டுபிடித்து முறையீடு செய்திருந்தும் அது தொடர்பில் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. (அமேசன் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court')

ஷிராணி திலகவர்தனவின் தனியான தீர்ப்பின் இரண்டு முழு பக்கங்கள் கணனியில் எழுத்துரு வடிவிலும் அளவிலும் செய்யப்பட்ட குளறுபடிகள் என்பதனை நான் கண்டுபிடித்தேன். இது முதல் 15 பக்கங்களின் 'Century Gothic' எழுத்தருவானது பெரிய அளவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முதல் 15 பக்கங்கள் 17 பக்கங்களாக மாறியிருந்தது, அதில் 'Century Gothic' எழுத்துருவின் பெரிய அளவில் மாறியிருந்த 16ம் 17ம் பக்கங்கள் நீக்கப்பட்டும் இருந்தது.

இதற்கு பிற்பாடு பெரிய அளவிலான Century Gothic எழுத்துருவிலான முதல் 14 பக்கங்களும் இரண்டு பக்கங்களிலும் போட்டோ பிரதி செய்யப்பட்டு இருந்ததுடன், 8வது பக்கத்தின் முதற்பகுதி பெரிய அளவிலான Century Gothic எழுத்துருவிலான 15வது பக்கத்தின் பகுதியையும் அதன் மறுபகுதியில் சிறிய Calibri எழுத்துருவிலான 16ம் பக்கத்தின் பகுதியும் அதன் முடிவில் நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் கையொப்பமும் இருந்தது. (கூகுள் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court')

Finally can the Court on its own volition free him from this undertaking merely because the President has expressed a concern to have him back? In considering this I am mindful of the fact that despite affidavits being tendered to Court, apologies being made to Court and the findings of the judgment, the Petitioner has *falsely made contrary representations* to the Secretary to the President in letters (marked "A") dated 25th July 2008 and (marked "F") dated 3rd June 2009. In his letters to the Secretary he contradicts the contents of his own affidavit, the submissions of his own counsel made at the time in Court and which is recorded in contemporaneous proceedings, and, in that sense, appears to be uncertain and confused. Did the Petitioner, in his affidavit, mean what he said or has he fabricated his stance? To say the least his word, in its varied contradictions, appears fickle.

13 OCT 2009

15

leads to a halt in the growth of the other. The promptings of a kind compassionate heart or sympathetic urgings must necessarily be bridled in dealing with the resources of the State, for it ultimately belongs to the People and must be in the custodianship of honest, disciplined, hardworking and effective public officers.

I accordingly dismiss the amended petition. No Costs.

JUDGE OF THE SUPREME COURT

13 OCT 2009

SRI LANKA

16

*இந்த மாறாட்டங்களினால் ஒரேயொரு மாறுபட்ட நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் 2 பக்க தீர்ப்பானது உள்ளடக்கப்படாமல் ஒக்டோபர் 13ம் திகதி 2009ல் உச்ச நீதிமன்றின் பதிவுகளில் வழங்கப்பட்டபோது அந்த பதிவுகளின் அடிப்படையில் அக்டோபர் 14ம் திகதி 2009ல் ஊடகங்களில் பரந்தளவில் பிரசுரிக்கப்பட்டிருந்ததோடு, பொதுநலன் கருதி பிரசுரமாகியிருக்கவேண்டிய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களின் அரசியல் சாசன கட்டுப்பாடுகள் தொடர்பிலான மிக முக்கிய உள்ளடக்கங்கள் ஊடகங்களில் பிரசுரமாகியிருக்கவில்லை என்பதோடு, இந்த மாறாட்டங்களினாலே ஒரேயொரு மாறுபட்ட தீர்ப்பினது முக்கியமான சார்பான உள்ளடக்கங்கள் ஊடகங்களில் வருவதையும் முடக்கியிருந்தது (அமேசன் புத்தகங்கள் - 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court'*)

*எதேச்சையாக கண்டியில் வசிக்கும் இந்த எழுவரடங்கிய நீதிபதிகள் குழாமில் அங்கத்தவராகவிருந்த ஒரு நீதிபதியின் நெருங்கிய உறவினர் மூலம் நான் தெரிந்து கொண்டது என்னவென்றால், குறித்த தீர்ப்பு அக்டோபர் 13, 2009 வழங்கப்படுவதற்கு முன்னைய நாள் குறித்த உறவினர் கொழும்பிலுள்ள அந்த நீதிபதியின் வீட்டில் தங்கியிருந்த போது, 12ம் திகதி இரவு 7 மணியளவில் குறித்த நீதிபதிக்கு பிரதம நீதியரசர் அசோக டி சில்வா அழைப்பு விடுத்து ஒரு அவசர இரவு நேர கூட்டத்திற்காக வரும்படி பணித்ததும், உடனடியாக உச்ச நீதிமன்றத்திற்கு சென்று குறித்த வழக்கு தொடர்பிலான பதிவேடுகளைக் கொண்டு வந்து இருந்ததாகவும், இது முரண்பட்ட நீதிபதியின் வேறுபாடான தீர்ப்பினை அவர் அறிவித்ததனை தொடர்ந்தே இடம்பெற்றதாகவும் அறிந்துகொன்டேன்.*

*பிரதம நீதியரசர் அசோக டி சில்வா மக்கள் நீதியையும் நேர்மையான நடத்தையையும் வேண்டுகிறார்கள் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் அடங்கிய வழங்கிய செவ்வியில், "நீதித்துறை கட்டாயமாக பாரபட்சமற்றதாகவும் சபைகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்றும் எனது காலப்பகுதியில் எந்தவொரு கிசு கிசுப்பிற்கோ அல்லது தொலைபேசி அழைப்புகளுக்கோ இடமிருக்காது என்றும் நீதித்துறையில் எந்தவொரு உறுப்பினர் மீதும் எந்தவகையிலும் எவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அழுத்தம் பிரயோகிப்பதனையோ அல்லது எந்தவொரு அரசியல் தலையீடையோ அல்லது சலுகைகளோ இடம்பெற நான் இடமளிக்கமாட்டேன். நீதிபதிகள் நன்னடத்தை உடையவர்களாகவும் மக்கள் முன்னிலையில் நம்பக்கூடியவர்களாகவும்,மதிப்பினை பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்" எனவும் தெரிவித்தார். - (Sunday Observer - July 19, 2009*)

*24.10.2011 அன்று வழங்கப்பட்ட விசேட தீர்ப்பில் ஒரு மாற்றத்தை வலியுறுத்திய என்னுடைய பிரத்தியேக சமர்ப்பணத்தை கண்ட சட்டமா அதிபர் மொஹான் பீரிஸின் நட்பிற்கு பாத்திரமான பிரதி சொலிசிட்டர் நாயகமும், ஜனாதிபதி சட்டத்தரணியும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் சட்டத்தரணியுமான DS விஜேசிங்க அவர்களும் ஆடிப்போனதுமன்றி மிகவும் துரிதமாக இந்த சமர்ப்பிப்பை எதிர்த்தார்கள் . குறித்த பொதுமக்களின் நலன் கருதி தாக்கல் செய்யப்பட்ட இந்த பிரத்தியேக சமர்ப்பணமானது பொதுவில் தெரிய வருகிற போது அது பொது மக்கள் இடையே முரண்பாட்டை தோற்றுவிக்கும் என அச்சத்தை வெளிப்படுத்தினார்கள். அதனை தொடர்ந்து தலைமை நீதிபதி NG அமரதுங்க அவர்கள் என்னுடைய மேலதிக எழுத்துமூல சமர்பணங்களை மீளப் பெறவும் அவை நீதிமன்ற பதிவேடுகளில் இருந்து நீக்கப்படவும் வேண்டும் என தீர்ப்பளித்தமையானது இத்தகைய உண்மைகள் பொதுமக்களை சென்றடைவதனை தடை செய்யும் முகமாக அமைந்தது. (கூகுள் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)

அதற்கமைய பெப்ரவரி 9 2012ன் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளை அவதானமாக கருத்திற்கொண்டு நான் 8.5.2012 ல் மேற்குறித்த குறிப்புகள் மற்றும் பிரத்தியேக சமர்ப்பணம் உள்ளடங்கலான சமர்ப்பணங்கள் போன்றவற்றை முன்வைத்து மேற்குறித்த தீர்ப்பில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி ஏற்கனவே நீக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தின் அறிக்கைகளில் சேர்க்கும் முகமாக மேலுமொரு மனுவொன்றை தாக்கல் செய்தேன். எனது அத்தகைய மீள் பரிசீலனை மனுவானது தலைமை நீதிபதி NG அமரதுங்கவினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இது தொடர்பில்தான் நான்கு, பிரதம நீதியரசர் இந்த வழக்கினை செவிமடுப்பதற்கு மாத்திரமே அனுமதியளித்தார் என்றும் முன்னெடுத்து செல்வதற்கு அல்ல எனவும் அவர் தெரிவித்திருந்ததாக குறிப்பிட்டிருந்த விடயத்திற்கு மறுப்போ எதிர்ப்போ தெரிவிக்காமல் அறையில் வைத்தே இதனை நிராகரித்திருந்தார். (அமேசன் புத்தகங்கள் - *'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)

அதேவேளை இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் சாமால் ராஜபக்ச அவர்கள் இலங்கை பாராளுமன்றத்தின் அனைத்து கட்சி தலைவர்களினதும் ஆலோசனையையும் அனுமதியையும் பெற்று உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்கெதிராக ஒரு கட்டளையை 9.10.2012ல் பிறப்பித்திருந்தார். பாராளுமன்றத்தின் சபாநாயகர் தன்னுடைய கட்டளையிலே, அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குடிமகனின் உரிமையானது முழுவதுமாக நடைமுறையில் இருக்கும் வகையில் வழங்கப்பட்ட விசேட தீர்ப்புக்களை உச்ச நீதிமன்றம் மீளாய்வு செய்வதினை உண்மையான கவனத்திற் கொள்ள வேண்டுமெனவும், அதைப்போலவே உச்ச நீதிமன்றம் விட்ட நிஜமான பிழைகளை திருத்தியமைப்பது அவசியம் எனவும் குறிப்பிட்டிருந்தார். அதனடிப்படையில் பாராளுமன்றத்தின் சபாநாயகரின் கட்டளைக்கமைய என்னுடைய விண்ணப்ப எண் SC (SD) 2/2011 மேலதிகமாக 18.10.2012ல் அரசியலமைப்பின் 123 (3) வது சரத்திற்கமைய 24.10.2011ல் வழங்கப்பட்ட விசேட தீர்ப்பினை மீளாய்வு செயும்படிக்கான மனுவையொன்றினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதனை விசாரிக்குப்படி வேண்டி நின்றேன். (கூகுள் புத்தகங்கள் - *'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)

முதற் சந்தர்ப்பத்தில் ஜனவரி 8, 2012ல் அரசியல் யாப்பின்132ம் சரத்தின் பிரகாரம் சரியான முறையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு அனுப்பப்பட்ட மனு போலல்லாது,இம்முறை பட்டியலிடும் நீதியரசரான K . ஸ்ரீபவன் அவர்கள் அரசியல் யாப்பின் 132 மற்றும் 123 (3) இந்த பிரகாரம் பிரதம நீதியரசரால் ஆய்வு செய்யப்பட வேண்டிய மனுவை பிரதம நீதியரசரின் முன் செல்லுவதை தடுத்தார். (அமேசன் புத்தகங்கள் - *'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)

நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் நடைமுறைப்படி குறித்த விண்ணப்பத்தை பிரதம நீதியரசருக்கு அனுப்புவதற்கு முன்னர் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டிருந்த ஆணையினை தனது கையில் எடுத்து குறித்த மனு தொடர்பிலான தனது விஜாக்கியானத்தினை முன் நடந்து முன்வைத்திருந்தார். இதனை செய்ததன் மூலம் நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் அரசியலமைப்பின் 80 (3) சரத்தினை தனது அறையில் இருந்தவாறு தன்னிச்சையாக வியாக்கியானம் செய்துள்ளார், அரசியல் சாசனத்தின் தீர்மானங்கள் உச்ச நீதிமன்றத்தின் முழுமையான நீதிபதிகள் முன் பொதுவான கேள்விக்குட்படுத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற அரசியல் சாசன விதிமுறைகளுக்கும், சரத்து 80 (3) அதன் நோக்கத்தோடும் உண்மையான நிலையோடும் இயற்கையான கட்டமைப்போடும் நோக்கிப்பார்க்கப்பட வேண்டும் என்ற நெறிகளுக்கும் அப்பால் சென்று நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் 22.அக்டோபர் 2012ல் இந்த தீர்ப்பினை எடுத்திருந்தார்.

மேலும் நீதியரசர் ஸ்ரீபவன் அவர்கள் "நீதித்துறை மற்றும் நீதிபதிகள் குழாமில் ஒருவர் பாரபட்சமானதும் தேர்ச்சியற்றதும் அந்த ஒரு சாரார் கருதினால் அவர்கள் அந்த எதிர்ப்பினை சட்டமூலமானது செவிமடுக்கப்பட்ட வேளையில் தெரிவித்திருக்க வேண்டும்" எனவும் குறிப்பிட்டிருந்தார். இது ஒரு அபத்தமான பொய்யாக இருந்தது **ஏனெனில், அக்டோபர் 24, 2011 ல் வழங்கப்பட்ட குறித்த விசேட தீர்ப்பின்போது இரகசியமாகவும் வெளிப்படையற்ற முறையிலும், பாதிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினருக்கும் அறிவித்தல் கொடுக்கப்படாத சூழ்நிலையிலும் அவசர சட்ட மூலத்தின் மீதான விசாரணைகள் இடம் பெற்றன.** என்னுடைய மனுவில் குறிப்பிட்டிருந்த வாக்குமூலங்கள் மூலமும், இந்த பின்னணியிலும்,என்னுடைய மனுவினை புறந்தள்ளியமைக்காக நீதியரசர் ஸ்ரீபவனை நான் எதிர்த்திருப்பேன் ஆனால், அப்படி செய்வதற்கான அவகாசம் எனக்கு இருக்கவில்லை ஏனெனில், அவர் இந்த விடயம் தொடர்பில் தானே தனியாக தனது அறையில் தீர்மானத்தை எடுத்திருந்தார் .

இந்த விடயமானது முழுமையாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவினால் நேரடியாக கையாளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் இதனை நீதியரசர் K ஸ்ரீபவன் கையாண்டதன் மூலம் எனது உச்ச நீதிமன்ற விண்ணப்ப இல 534/2011 ன் மீதான விசாரணையின்போது, மனுவை ஏற்றுக்கொண்டு

பிரதிவாதிகளுக்கு அறிவித்தலும் கொடுத்த பின்னர் நீதியரசர் NG அமரதுங்க அவர்கள் பிரதம நீதியரசர் எனது வழக்கை செவிமடுக்க மாத்திரமே அனுமதி கொடுத்துள்ளார் முன்னெடுப்பதற்கு அல்ல என தெரிவித்ததை போல இவருக்கும் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டதா என்னும் கேள்வி எழுகின்றது. இது குறித்து காட்டப்பட வேண்டிய விடயம் அல்ல எனினும், தனது கணவர் உயர்ந்த அரசியல் நியமனமான அரச பதிவியில் இருப்பதனை பிரதம நீதியரசர் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது. . (கூகுள் புத்தகங்கள் – 'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court' / 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'/ 'Politics, Justice & the 'Rule of Law'')

எவ்வாறெனினும் மறு தினமே அக்டோபர் 23, 2012 அன்று முரண்பாடான நீதியரசர் ஸ்ரீபவனின் கருத்தை பிரதம நீதியரசர் ஆமோதித்ததோடு நீதியரசர்களான NG அமரதுங்க, PA ரத்நாயக்க, மற்றும் C ஏக்கநாயக்க ஆகியோரும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். மிக முக்கியமாக பெப்ரவரி 9, 2012ல் நான் வலியுறுத்திய, அவரது, நியாயாதிக்க பாரபட்சம் மற்றும் தகுதியின்மை ஆகிய காரணங்கள் மறுக்கப்பட முடியாதவையாகவும், கேள்விக்குட்படுத்த முடியாதவையாகவும், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் மறுக்கப்படவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. மேற்குறித்த உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்களதும் ஏனைய நீதியரசர்களினதும் நடவடிக்கையானது, இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் அவர்கள் இலங்கை பாராளுமன்றத்தின் அனைத்து கட்சி தலைவர்களினதும் ஆலோசனையையும் அனுமதியையும் பெற்று உச்ச நீதிமன்றத்தின் விசேட தீர்ப்பிற்கெதிராக அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குடிமகனின் உரிமையானது முழுவதுமாக நடைமுறையில் இருக்கும் வகையில் வழங்கப்பட்ட விசேட தீர்ப்புக்களை உச்ச நீதிமன்றம் மீளாய்வு செய்வதினை உண்மையான கவனத்திற் கொள்ள வேண்டுமெனவும், அதைப்போலவே உச்ச நீதிமன்றம் விட்ட நிஜமான பிழைகளை திருத்தியமைப்பது அவசியம் எனவும் கொடுத்திருந்த ஆணையை மீறும் வகையில் அமைந்திருந்தது. (அமேசன் புத்தகங்கள் 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law' / 'Politics, Justice & the 'Rule of Law'')

*அரசியல் யாப்பிற்கு முரணானதும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 17வது அம்சத்திலுள்ள இயற்கை நீதியை மறுத்ததுமான 24 அக்டோபர் 2011ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் பாரியளவில் பாதிக்கப்பட்ட கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் உரிமைத்துவ கம்பெனியான ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா நிறுவனத்தின் பங்குதாரரும் ஊக்குவிப்பாளரும் என்ற வகையில், நான் பாதிக்கப்பட்ட நபராக இருந்ததோடு, ஒரு சிலரது நன்மைக்காக குறித்த நிறுவனமானது இந்த அவசர சட்டத்தின் மூலம் அரச உடைமையாக்கபட்டும் இருந்தது. அதேவேளை நான் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரகாரம் குறித்த கம்பெனியினை சட்ட அதிகாரத்தின்படி மறுசீரமைக்கும் படியான ஒரு மனுவை வழக்கு இல 52/2011/CO வினை சரியாகவும் சட்டபூர்வமாகவும் தாக்கல் செய்து இருந்ததோடு, இந்த நீதி அதிகாரமானது அரசியலமைப்பின்படி தள்ளி வைக்க முடியாத இறையாண்மையின் ஒரு அங்கமாக இருந்ததனை 2002ம் ஆண்டில் எழுவரடங்கிய உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் குழுவின் தீர்ப்பு எடுத்துக்காட்டியிருந்ததனையும் என்னுடைய மனுவில் நான் உள்ளடக்கியிருந்தேன். (கூகுள் புத்தகங்கள் -* 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law' / 'Politics, Justice & the 'Rule of Law'')

*இதற்கு முன்னதாக நான் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின் போது ஜப்பானிய கூட்டுறவிற்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு இல 3155/Spl இனை தாக்கல் செய்து வெற்றியும் கண்டதுமன்றி, பல்வேறு தீர்ப்புக்கள் அடங்கிய உச்ச நீதிமன்ற வழக்கு 33&34/1992 லே நான் உண்மையிலேயே மோசடி இடம்பெற்றுள்ளதை உறுதியாக நிரூபித்ததன் நிமித்தம், குறித்த ஹோட்டல் கட்டுமானத்திற்காக ஹோட்டல் டிவோலபேர்ஸ் லங்காவோ இலங்கை அரசாங்கத்தின் காப்புரிமத்தின் பேரில் இலங்கை அரசோ ஜப்பானிய கூட்டுறவுகளுக்கு எவ்வித கொடுப்பனவுகளையும் செய்ய தேவையில்லை என்ற தீர்ப்பினையும் உச்ச நீதிமன்றம் வழங்கியது. இதனை தொடர்ந்து குறித்த மோசடி தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பதாக நான் குற்றம் இடம்பெற்றிருப்பதை நிரூபித்ததோடு, அதனை ஜப்பானிய கட்டிட வடிவமைப்பு நிறுவனங்கள் மறுத்திருக்கவில்லை என்பதோடு ந.அபி.அதி. அதனை ஏற்றுக் கொண்டது. (அமரசேகர எதிர் மிட்சுய் அன்ட் கோ மற்றும் ஏனையோர் (1992) LRC (Comm) (அமேசன் புத்தகங்கள் –* 'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government – Vol. 1 – Sri Lanka's First Derivative Action in Law' / 'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government - Vol. 2 - Criminality Exposed, but Perversely Covered-up')

*நான் எனது வழக்குகளை தொடர்ந்து முன்னெடுத்து இருந்திருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பது மாத்திரமல்லாது ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்காவின் பிரதான பங்குதாரராக இலங்கை அரசங்கமல்லாது நானே இருந்திருப்பேன். எனினும் அரசாங்கத்தின் மீது ஜப்பானிய அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்பட்ட*

*அதீத அழுத்தத்தின் நிமித்தம் எனக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை மூலம் இலங்கை அரசு எனது மனுக்களை வாபஸ் பெறும்படி கேட்டுக்கொண்டது, எனது வற்புறுத்தலின் பேரில் ஜப்பானிய கடன்கள் மீது இலங்கை அரசாங்கம் வழங்கிய உத்தரவாதத்தின் மீது கேட்கப்பட்ட நியாயமற்ற கொடுப்பனவை தள்ளுபடி செய்திருந்தேன், இந்த தள்ளுபடியானது அன்றைய பெறுமதியின்படி ஜப்பானிய யென்னில் 17,586 மில்லியனாகவும்,அமெரிக்க டொலரில் 207மில்லியனாகவும் இலங்கை ரூபாவில் 10,200 மில்லியனாகவும் கணக்கிடப்பட்டது, பின்னர் இலங்கையின் மிகுதி கடன் தொகையானது 16 வருடங்களில் குறைந்த வட்டி வீதத்தில் 16 வருடங்களில் மீள செலுத்தும்படிக்கான முறையில் 30.06.2016ன்படி ரூபா. 89 பில்லியன் ஆகவும், மீளத்தவணைப்படுத்தப்பட்ட பெறுமதியானது ரூபா 51.3 பில்லியன் ஆகவும் கணிப்பிடப்பட்டது.* (கூகுள் புத்தகங்கள் - *'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government Vol. 3 - Settlement of a Fraud'* / *'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)

*செப்டம்பர் 2014ல் ஜப்பானிய பிரதமர் சினோ அபே இலங்கை வந்தபோது உரத்த ஊடக தலைப்பாக "13 பில்லியன் கடனுதவியுடன் அபே வந்தார்" (ஜூன் 2016 உடன் ஒப்பிடும்போது அதன் பெறுமதி 15.5 பில்லியன்) மேற்குறித்த என்னால் பெறப்பட்ட தள்ளுபடி தொகையானது ஜப்பானிய பிரதமர் கொடுத்த கடனிலும் பார்க்க 5 1/2 மடங்காக இருந்ததுடன் நான் முழு தள்ளுபடியினை பெற்றுக்கொடுத்தேன் கடனை அல்ல.*

*அதைப்போன்றே G 7 மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்துகொண்ட போது ஜப்பானிய பிரதமரால் வழங்கப்பட்ட ரூபா 50 பில்லியன் கடனுடனும் இது ஒப்பிட்டு பார்க்கப்பட வேண்டும்.*

*தீர்வு ஒப்பந்தத்தில் காணப்பட்ட ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்காவின் மறுசீரமைப்பு உள்ளடங்கலான ஏனைய விடயங்களை கேள்விக்குரிய முறையில் கட்டுப்படுத்தி ஜப்பானிய கூட்டுறவுகளுக்கு கொடுப்பனவுகளை கொடுக்கும்படிக்கான கேள்விக்குரிய முரண்பாடான வகையில் மேன் நீதிமன்ற நீதியரசர் CV விக்னேஸ்வரன் மார்ச் 1999ல் வழங்கிய தீர்ப்பானது மே 2014லேயே நிராகரிக்கப்பட்டது. – www.nihalsriamarasekere-hiltonhotelcase.com*

*இதன் நிமித்தம் ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா பாரிய நீதி நெருக்கடிக்கு முகங்கொடுத்தத்தன் காரணமாக, ஜப்பானிய மீள் செலுத்தவேண்டிய கடன்களுக்கான இலங்கை அரசாங்கமானது ரூபா 3,949 மில்லியனை முற்பணமாக ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்காவிற்கு கொடுத்து பின்னர் அதன் மீதான வட்டியாக,ரூபா 8,149 மில்லியனை அறவிட்டதுடன், மூலதனத்தை மிஞ்சிய வட்டியோடு மே 2011ல் ரூபா 12,098 மில்லியனை கோரியது, இதன் விளைவாகவே குறித்த 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் அவசர சட்டமூலத்தின் மூலம் ஹோட்டல் டிவலபேர்ஸ் லங்கா நிறுவனமானது இலங்கை அரசாங்கத்தின் வசமானது; அதிலும் உச்ச நீதிமன்றமானது எனது மனுக்களை செவிமடுக்காது, ஈடு செய்ய முடியாததும், சீர்படுத்த முடியாததுமான நஷ்டத்தை எனக்கு வருவித்து, நேர்மையற்ற முறையில் அரசாங்கத்திற்கு நன்மையை ஏற்படுத்தியது, அதன் நிமித்தம் எனக்கு அரசாங்கமானது சரியான நஷ்ட ஈட்டை கொடுப்பதற்கு நியாயமாக வழிவகுத்தது, இது எனது தனிப்பட்ட வியாபாரமாக இருந்ததுமன்றி, அரசாங்கத்தின் வற்புறுத்தலின் பேரிலே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளின் அடிப்படையில் இது செலுத்தப்பட்டது. இது ஒரு திட்டத்தை மேம்படுத்துவதற்காக தனிப்பட்ட முறையில் நான் ஈடுபட்டதின் நிமித்தம் செய்யப்பட்ட வழக்கு, என்னுடைய ஏனைய பொதுநல வழக்குகளில் அரசாங்கமும் பொதுமக்களும் பாரிய அளவில் அவற்றின் செலவு உட்பட நன்மை அடைந்துளார்கள். (அமேசன் புத்தகங்கள் – 'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government – Vol. 1 – Sri Lanka's First Derivative Action in Law' / 'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government - Vol. 2 - Criminality Exposed, but Perversely Covered-up' / 'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government Vol. 3 - Settlement of a Fraud' / 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law'*)




மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில் 2012ம் ஆண்டு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்களுக்கு எதிரான குற்ற பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் படி நியாயமான காரணங்கள் எனக்கு இருந்தன, அரசியல் யாப்பு மீதான உச்ச நீதிமன்றின் இன்னொரு நீதிபதிகள் குழாமின் முன்னாலான மனுமீது ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் 2012 கொடுத்த வியாக்கியாணங்களும், இவ் இரண்டு குழுக்களுக்கும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவே தலைமை தாங்கியிருந்தார், அத்தோடு,தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்றதாக கூறப்பட்ட்ட மோசடியான பங்கு விற்பனை தொடர்பில் அவரது கணவர் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக மே 2012ல் நீக்கப்பட்டார். அக்டோபர் 24, 2011 ல் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவினால் கொடுக்கப்பட்ட விசேட தீர்ப்பில் காணி மற்றும் மாகாண சபைகள் தொடர்பிலான வியாக்கியானம் ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் 2012 கொடுத்த தீர்ப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது.

நவம்பர் 6, 2012ல் 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 117 பேர் கையொப்பம் இட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுகள் அடங்கிய பத்திரம் பாராளுமன்றத்தின் கட்டளைதாளிலே உள்ளடக்கப்பட்டது. கௌரவ சபாநாயகர் அவர்கள் அரசியல் யாப்பின் பிரகாரம் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமித்து இது தொடர்பில் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் படிக்கு கூறினார், அந்த அறிக்கை டிசம்பர் 8ம் திகதி 2012 ஆண்டு அவரை மூன்று குற்றங்களிலே குற்றவாளியாக கண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (கூகுள் புத்தகங்கள் - 'Politics, Justice & the 'Rule of Law')

பல்வேறு விடயங்கள் உள்ளடங்கலாக மேற்குறித்த விடயங்களோடு, டிசம்பர் 5, 2012ல் சபாநாயகருக்கு ஒரு சத்திய கடதாசியை அனுப்பி அதனை மீண்டும் ஜனவரி 5, 2013ல் கடிதம் ஒன்றின் மூலம் கேட்டிருந்த விடயம் என்னவெனில், சபாநாயகர் அக்டோபர் 2012ல் வழங்கிய பணிப்புரையை அமுல் செய்யவில்லை எனவும், எனவே, அந்த வேளையில், பிரதம நீதியரசரின் சார்பில் நின்ற நீதிபதிகள், இப்போது பிரதம நீதியரசரை நீக்கும்படிக்கான நடைமுறைகள் தொடர்பிலான வழக்குகளை விசாரிக்க தகுதியற்றவர்கள் அல்லவா? என கேட்டிருந்தேன்.

டிசம்பர் 8ம் திகதியிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையிலே, மேற்குறித்த என்னுடைய அக்டோபர் 2012 SC (SD ) 2/2011 விண்ணப்பம் மற்றும் அதன் மீதான அறிக்கைகளை பாராளுமன்ற தெரிவுக்குழு முன் டிசம்பர் 4 2012 அன்று கோரியிருந்தத்தோடு, ஆதாரம் இவ்வறிக்கையின் 1437ம் பக்கத்தின் 1ம் பந்தி, அதனையடுத்து இரண்டு நாட்களில் டிசம்பர் 6 2012ல் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவும் அவரது சட்டத்தரணிகளும், பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளிலிருந்து வெளிநடப்பு செய்திருந்தார்கள், ஆதாரம் இவ்வறிக்கையின் 1505ம் பக்கத்தின் 2வது பந்தி. (அமேசன் புத்தகங்கள் - 'Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law' / 'Politics, Justice & the 'Rule of Law')

பாராளுமன்றமானது குறித்த அறிக்கை தொடர்பில் 2013 ஜனவரி 10 மற்றும் 11ம் திகதிகளில் விவாதித்ததோடு, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை நீக்கும்படி 155 உறுப்பினர்கள் சார்பாகவும் 49 பேர் எதிராகவும் 20 பேர் வாக்கெடுப்பில் பங்குகொள்ளாமலும் இருந்த நிலையில் நிறைவேற்றப்பட்டது. அதனை தொடர்ந்து ஜனவரி 13, 2013ல் பிரதம நீதியரசரை அப்பதவியிலிருந்து நீக்கும்படிக்கான உத்தரவில் ஜனாதிபதி கைச்சாத்திட்டார். (கூகுள் புத்தகங்கள் - 'Politics, Justice & the 'Rule of Law')

பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்யும் இந்த தீர்ப்பு தொடர்பில் எனது சார்பான நிலைப்பாட்டிற்காக பல்வேறு இடையூறுகளுக்கும் விபரம் தெரியாத பல்வேறு சர்வதேச நிறுவனங்கள்,முகவர்கள்,மற்றும் கூட்டுத்தாபனங்கள் வெறும் வாய்ப்பேச்சை கேட்டும் ஊடகங்களில் வெளிவந்தவற்றினை கேட்டும் என்னை சாடியிருந்தன. ஆகவே நான் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கிய தகவல்களுடன் கூடிய கடிதங்களை கீழுள்ள குழுக்களுக்கு நியாயாதிக நடத்தை தொடர்பிலான ஐ.நா. பெங்களூர் கொள்கைகள்

*காமென்வெல்த் லட்டிமார் ஹவுஸ் கொள்கைகள் போன்றவற்றை மேற்கோள் காட்டி எழுதியிருந்தேன். (அமேசன் புத்தகங்கள் - 'Politics, Justice & the 'Rule of Law'*)

- ஐ.நா. உரிமைகள் ஆணையகம்
- அமெரிக்க இராஜாங்க திணைக்களம்
- ஐரோப்பிய ஒன்றியம்
- சர்வதேச நீதிபதிகள் சங்கம்
- சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு
- கொமன்வெல்த் செயலாளர் நாயகம்
- சர்வதேச சட்டத்தரணிகள் சங்க மனித உரிமைகள் நிலையம்
- சட்டத்தரணிகள் மனித உரிமைகள் குழு இங்கிலாந்து வேல்ஸ்
- அமெரிக்க சட்ட தரணிகள் சங்கம்
- கொமென்வெல்த் சட்டத்தரணிகள் அமைப்பு
- கொமென்வெல்த் நீதிபதிகள் அமைப்பு
- கொமென்வெல்த் சட்டக் கல்வி அமைப்பு
- கனேடிய சட்டத்தரணிகள் சங்கம்
- அவுஸ்திரேலிய சட்ட பேரவை
- அனைத்து இந்திய சட்டத்தரணிகள் சங்கம்
- ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு
- ஆசிய சட்ட வள மையம்

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2010ம் ஆண்டின் மனித உரிமைகள் - இலங்கை அறிக்கையின் 25ம் 26ம் பக்கங்களில் காணப்பட்ட மிக முக்கியமான பகுதிகள் கீழ்வருமாறு: பகுதி 4: உத்தியோகபூர்வ ஊழலும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையும் என்ற தலைப்பிலான அறிக்கையில்,

- உத்தியோகபூர்வ ஊழல்களிற்கு சட்டத்தில் குற்றவியல் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது: எவ்வாறெனினும் அரசாங்கம் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதோடு, மூன்று கிளைகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள் அடிக்கடி மோசடியான நடவடிக்கைகளில் குற்றத்திலிருந்து தப்பும் அதிகாரத்தோடு ஈடுபட்டிருந்தார்கள்.

- 2008ம் ஆண்டில் உச்ச நீதிமன்றமானது அன்றைய திறைசேரியின் செயலாளரான PB ஜயசுந்தர அவர்களை கொழும்பு துறைமுகத்தின் விரிவாக்கம் தொடர்பிலான பாரிய ஒப்பந்தமொன்றினை வழங்கியபோது முறையான நடைமுறைகளை பின்பற்றாமல் மீறியிருந்தார் என்பதனை கண்டுபிடித்து அவரை குற்றவாளியாக தீர்ப்பளித்தது.நீதிமன்றமானது அவர் திறைசேரியில் பதவி வகிப்பதை தடுத்திருந்தது.2009ல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உச்ச நீதிமன்றத்திற்கு புதிய பிரதம நீதியரசரை நியமித்ததன் பின்னர் உச்ச நீதிமன்றமானது முதற்கொடுக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்ய அனுமதித்திருந்தது. உச்ச நீதிமன்றமானது முன்னைய தீர்ப்பினை தலை கீழாக மாற்றி P.B. ஜயசுந்தர அவர்களை மீண்டும் திறைசேரியின் செயலாளராக நியமித்தது.

அரசாங்கத்தின் மூன்று கிளைகளில் ஒன்றாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை நீதித்துறையாக இருக்கின்ற அதேவேளை மற்றைய இரண்டு துறைகளாக நிறைவேற்று மற்றும் சட்டவாக்க துறை ஆகியன காணப்படுகின்றன. இலங்கையின் அதியுச்ச நீதிமன்றமான உச்ச நீதிமன்றத்தின் ஒரு சிரேஷ்ட நீதிபதியாக நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அப்போது காணப்பட்டார். மே 18, 2011ல் ஐந்தே அமெரிக்க இராஜாங்க திணைக்கள அறிக்கையின் பின்னர் அவர் இலங்கையின் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

சட்டத்தரணிகள் மனித உரிமைகள் குழு இங்கிலாந்து வேல்ஸ் அமைப்பினால் ஜனவரி 2, 2013ல் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் நான் உடனடியாகவே ஜனவரி 3, 2013ல் நீண்ட சமர்ப்பணங்களை செய்திருந்தேன். என்னுடைய இந்த சமர்ப்பணங்கள் கிடைக்கப்பெற்றதை மின்னஞ்சல் மூலம் உறுதி செய்த அவர்களது திட்ட ஒருங்கமைப்பாளர் இலாரி அரகோன் அவற்றிக்கு நன்றி தெரிவித்ததோடு,என்னுடைய சமர்ப்பணங்கள் இலங்கை தொடர்பில் கண்காணிக்கும் தமது சக ஊழியர்களோடு பகிரப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

எனது ஜனவரி 3, 2013ல் கொடுக்கப்பட்ட இந்த சமர்ப்பணங்களை மதிக்காது, 27 பெப்ரவரி 2013ல் சட்டத்தரணிகள் மனித உரிமைகள் குழு இங்கிலாந்து வேல்ஸ் அமைப்பிற்காக ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC வெளியிட்ட அறிக்கையானது, ஊடகங்களில் " பிரபலமான இங்கிலாந்து சட்டத்தரணி ஷிராணி பண்டாரநாயக்க குற்றமற்றவர் என தெரிவிக்கிறார், அத்தோடு, இலங்கையில் இடம்பெறும் கொமென்வெல்த் அரச தலைவர்கள் மாநாட்டிற்கு மகாராணி அவர்களை செல்ல வேண்டாம் எனவும்

*வலியுறுத்துகிறார் என பிரசுரமாகி இருந்தது. ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC அவர்களது அறிக்கைக்கு நான் உடனடியாவே மார்ச் 5 2013ல் பதிலளித்திருந்தேன்.*

*எனது ஜனவரி 3 2013ல் கொடுக்கப்பட்ட இந்த சமர்ப்பணங்களை மதிக்காது, 27 பெப்ரவரி 2013ல் ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC வெளியிட்ட அறிக்கை தொடர்பிலான எனது மார்ச் 5, 2013 கடிதத்திற்கு அவர் மாத்திரம் அறிந்த காரணங்களுக்காக அவர் பதிலளிக்க தவறியிருந்தார். எவ்வாறெனினும் வெளிநாடுகளில் எனக்கிருந்த தொடர்புகளின் மூலம் ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC அவர்கள் LTTE/TGTE இனொடு தொழில்ரீதியான முறையில் இணைத்திருந்தார் என அறிந்ததோடு, அந்த உறவு தொடர்பில் இணைய தளங்களில் வெளிவந்த செய்திகள் தொடர்பில் காணப்பட்ட முரண்பாடுகள் குறித்து தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.*

*இதற்கு பின்பதாக, நவம்பர் 15, 2015ல் இலங்கையில் நிலைமாறும் நீதி பொறிமுறை தொடர்பில் கண்காணிக்கும் ஏனையோர் அடங்கிய குழுவில் ஒருவராக ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC பரிந்துரை செய்திருந்த நாடுகடந்த தமிழீழ பிரதமரின் உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றின் பிரதி எனக்கு கிடைத்தது. இது ஜெப்ப்ரி ரொபேர்ட்ஸன் QC தொழில் தர்மத்தினை மீறுவதாகவும், அவரால் 27 மார்ச் 2013ல் வெளியிடப்பட்ட அறிக்கையினை பெறுமதியற்றதும்,நம்பமுடியாததுமென கருதுவதற்கான சிறந்த உதாரணம் அல்லவா?*


Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதம அமைச்சர் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA

www.tgte.org
pmo@tgte.org

November 17, 2015

**SRI LANKA - EXPERT PANEL NOMINATED TO MONITOR TRANSITIONAL JUSTICE MECHANISMS FROM VICTIMS' PERSPECTIVE**

Geoffrey Robertson QC | Justice Shah | Marie Guiraud

Richard Rogers | Peter Haynes QC | Heather Ryan

நீதித்துறை நடைமுறை தொடர்பிலான பெங்களூர் கொள்கைகள்

> ***"நீதிபதியொருவர் தனது சேவைகளை எந்தவொரு பாகுபாடோ, பக்கசார்போ இன்றி முன்னெடுக்க வேண்டும்"***
>
> ***"நீதிபதியொருவர் சட்டவாக்க துறை மற்றும் நிறைவேற்று துறை போன்றவற்றுடனான முறையற்ற தொடர்புகளை கொண்டிருக்க கூடாது என்பதோடு, அவற்றினை கண்காணிக்கும் சுதந்திர நபராகவும் தென்பட வேண்டும்"***
>
> ***"நீதிபதியொருவர் தனது கடமையினை சுயாதீனமாக, இருக்கும் சட்ட விளக்கத்தின்படியும், தரவுகளின்படியும், எந்தவொரு இடையீடுகளையோ, அழுத்தங்களையோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு சாராரிடமிருந்தும் பயமுறுத்தல்களோ இல்லாத வகையில் செய்யவேண்டும்."***
>
> ***"நீதி கடமைகளை நிறைவேற்றுகின்ற போது, தன்னுடைய சக நீதிபதிகளுக்கு சுதந்திரமான தீர்ப்புகளை எடுப்பதற்கான சுயாதீனம் உள்ளது என்பதனை கருத்திற்கொள்ள வேண்டும்."***
>
> ***"ஒரு நீதிபதி நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவரது நடவடிக்கைகள் பொது மக்களின் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கான மையத்தினை உறுதி செய்ய வேண்டும்."***

கொமென்வெல்த் லட்டிமார் ஹவுஸ் கொள்கைகள்

> ***"நீதித்துறை மீது நியாயபூர்வமான விமர்சனங்கள் பொறுப்புக்கூறலின் ஒரு பகுதியாகும்"***

***“நீதிபதிகள் அரசியலமைப்பிற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களும், சட்டத்தினை உண்மையாகவும் சுதந்திரமாகவும் நேர்மையுடனும் அமுல் படுத்த வேண்டும்.....நீதிபதிகள் சட்டவாக்கங்களை தேவையானகேற்ற முறையில், கட்டியெழுப்பும் வகையில் வியாக்கியானம் செய்யும் அதேவேளை, பாராளுமன்றத்தின் சட்டவாக்க உரிமையை மீறி செயற்பட முடியாது”***

***“ஊழலுக்கெதிரான பூஜ்ய பொறுமையினை ஊக்குவிப்பதானது நல்லாட்சிக்கு மிக முக்கியமாகும்.”***

*நான் ஆணித்தரமாக வேண்டுவது யாதெனில், மேற்குறித்த சர்வதேச நிறுவனங்கள் அமைப்புக்கள் மற்றும் முகவர்கள், மேற்குறித்த தகவல்களையும் சம்பவங்களையும் கருத்திற்கொண்டு, நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவோ அல்லது மற்றைய நீதியரசர்களோ ஐ.நா. நீதித்துறை நடவடிக்கை பெங்களூர் கொள்கைகளினையும், லட்டிமார் ஹவுஸ் கொள்கைகளையும் பின்பற்றியுள்ளார்களா என்பதனை தீர ஆராய்ந்து இவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் கண்டனத்தை வெளியிடுவார்களா? நீதியின் நன்மை கருதி நான் கடுமையாக நம்புகிறேன் இந்த விடயம் தொடர்பில் சர்வதேச ஊடகங்களில் தவறாக பாரிய அளவில் இந்த முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரங்கள் தொடர்பில் இந்த மேற்குறித்த சர்வதேச நிறுவனங்கள் அமைப்புக்கள் மற்றும் முகவர்கள் அதனை செய்ய வேண்டும் என நான் கருதுகிறேன். (கூகுள் புத்தகங்கள் - ‘Politics, Justice & the ‘Rule of Law’*)

*மூலம்* : Consultants 21 Ltd. – www.consultants21.com